REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 24 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 228 | Tuesday 24, September, 2024 | 16பக்கங்கள் | 50/-




## 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட

# ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவிப்பிரமாணம்

ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரம் உருவாக்கப்படும்

எம் மீது நம்பிக்கை வைக்காத மக்களின் மனதிலும் நம்பிக்கையை உருவாக்கும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாக புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

06







**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க நேற்று(23) பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நாட்டின் புதிய ஜனாதிபதியாக அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வு, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று(23) முற்பகல் மிக எளிமையாக

06

## கொழும்பு பங்குச்சந்தையில் துரித முன்னேற்றம்



கொழும்பு பங்குச் சந்தையில் நேற்று (23) குறிப்பிடத்தக்க வர்த்தக நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பின்னர், புதிய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் கொழும்பு பங்குச் சந்தை வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் நேற்றாகும். அதன்படி, வர்த்தக நடவடிக்கை ஆரம்பமான இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 11,080.14 அலகுகளாகப் பதிவாகின. இது முந்திய நாளுடன்

06

## பிரிவினைகளை ஊக்குவிக்காத அமைதியான ஜனாதிபதி தேர்தல்

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு




இலங்கையின் 09 ஆவது ஜனாதிபதித் தேர்தல் இன, மத, பேதங்களை மையப்படுத்தி பிரிவினைகளை ஊக்குவிக்காத, மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாக அமைந்திருந்ததாக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு, நாட்டுக்கு வருகைத்தந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்

06

## இலங்கையுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம்

இந்திய பிரதமர், சீனா ஜனாதிபதி வாழ்த்து



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீனா ஜனாதிபதி வாழ்த்து ஜி ஜின்பிங் ஆகியோர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

அதன்படி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதற்கு அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துகள். இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை கொள்கையின் கீழ் இலங்கை

06

## புதிய ஜனாதிபதியின் செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமநாயக்க



புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு

## NIE திட்டமிடல் பணிப்பாளர் CID யினரால் கைது



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள், பரீட்சைக்கு முன்னர் வெளியானமை தொடர்பாக மஹரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரீட்சை தொடர்பான முறைகேடுகள், வினாத்தாள் கசிவு குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

06

## ஜனாதிபதி அநுரவுக்கு சபாநாயகர் வாழ்த்து



இலங்கையின் 09 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெறுவதற்கு நாடு முழுவதிலுமுள்ள மக்கள் தமது வாக்குகளை மிகவும் அமைதியான முறையில் பயன்படுத்தியிருப்பதனூடாக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்

06



03

### இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை

ஓய்வை அறிவித்த மைத்திரி



03

தேர்தலில் வெற்றிபெற்ற

### ஜனாதிபதி அநுரவுக்கு அமெரிக்கா வாழ்த்து

## அநுரவின் வெற்றிடத்துக்கு லக்ஸ்மன் நிபுன நியமனம்

தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்



தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு லக்ஸ்மன் நிபுன ஆராச்சி, பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவார் என தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க, இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட

06

## பிரதமர் பதவியை இராஜினாமா செய்த தினேஸ் குணவர்தன



பிரதமராகவிருந்த தினேஸ் குணவர்தன தனது பதவியை இராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், பிரதமர் பதவியைத் துறப்பதற்கான தனது கடிதத்தை தினேஷ் குணவர்த்தன காலையிலேயே கையளித்தார். செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்

06

## தமிழர் அபிலாஷைகள் தங்கள் ஆட்சியில் மலரும்

சிறிதரன் எம்.பி வாழ்த்தில் எதிர்பார்ப்பு



ஈழத்தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில், தங்களின் ஆட்சி மலர வெற்றிக்கான வாழ்த்துகள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தீவின் 9வது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது

06

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு மு.கா தலைவர் வாழ்த்து



ஜனாதிபதி தேர்தலில் இலங்கை மக்கள், தமது திடவுறுதியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அவரது சகாக்களின் வெற்றிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். தேசப்பற்றுடன் ஜனநாயகத்தின் உண்மையான உணர்வோடு இந்த வெற்றியை நாம் நிலைநிறுத்துவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

06





# ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவிப்பிரமாணம்








இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இந்த பதவிப் பிரமாண நிகழ்வு நேற்று கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.






தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 24 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.04
அஸர் - 03.16
மஃரிப் - 06.07
இஷா - 07.17

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 08
ராகுகாலம் : மாலை : 3.02 - 4.32வரை
சுபநேரம் : காலை : 10.32 - 12.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி






ஜனாதிபதியாக நேற்று பதவியேற்ற அநுர குமார திசாநாயக்க மல்வத்தைபீடத்திற்குச் சென்று மல்வத்தை மகாநாயக்கர்களிடம் ஆசி பெற்றுக் கொண்டதுடன் கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாட்டிலும் கலந்து கொண்டார். **நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

## தேர்தலுக்குப் பின்னர் இதுவரை எந்த முறைப்பாடுகளும் இல்லை

### பெப்ரல்



தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லையெனவும் வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் இம்முறை ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளதாகவும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் (பெப்ரல்) நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான முறைப்பாடுகள் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் 06

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா புதிய ஜனாதிபதி அநுரவுக்கு வாழ்த்து



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்த, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தியத் தலைமைத்துவத்தின் நல்வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், மக்களின் ஆணையினை வென்றமைக்காக தனது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார். .

நேற்று முன்தினம் (22) மாலை பத்தரமுல்லையிலுள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவை

இந்த சந்திப்பு தொடர்பாக, தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா,

பல நாகரிக ஒற்றுமைகளை கொண்டுள்ள இரட்டையராகவும் நமது இரு நாடுகளினதும் மக்களது செழுமைக்காக உறவுகளை மேலும் வலுவாக்க உறுதிபூண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் திசாநாயக்க ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டதனையடுத்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு ஜப்பான் தூதுவர் வாழ்த்து



இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவுக்கு, இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதில் அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து பணியாற்ற தான் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் தமது தலைவரை தெரிவு செய்வதில் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டில் தீவிரமாக பங்குபற்றியமைக்காகவும் தாம் வாழ்த்த விரும்புவதாகவும் ஜப்பான் தூதுவர் தனது வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முதலாவது முஸ்லிம் பெண் அறிவிப்பாளர் காலமானார்



இலங்கை வானொலியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண்ணான ஆயிஷா ஜுனைதீன் தனது 74 ஆவது வயதில் காலமானார்.

முஸ்லிம் சேவை முதல் பணிப்பாளர் வி.ஏ .கபூரின் சிபார்சில் முதன் முதலாக "பிஞ்சு மனம்" சிறுவர் நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பை பெற்ற ஆயிஷா ஜுனைதீன், சிலாபம் மாதம்பை பழைய நகரிலிருந்து வானொலிக்குள் பிரவேசித்து, முஸ்லிம் சேவையின் முதல் பெண் தயாரிப்பாளரானார்.

இலங்கை வானொலியில், செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண் செய்தி வாசிப்பாளர் என்ற பெருமையும் தொலைக் காட்சியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண் மற்றும் அறிவிப்பாளர் என்ற பெருமையும் இவரையே சாரும். 06

## ஜனாதிபதி தெரிவு குறித்து அதி விசேட வர்த்தமானி




இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று (23) வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க 57 இலட்சத்து 40 ஆயிரத்து 179 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஓய்வுபெற்ற விமானப்படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ்.சம்பத் துய்யகொந்த நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன நேற்று (23) நியமிக்கப்பட்டார். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உப சரத்து 52 (1) இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## அநுரவுக்கு ACJU வின் வாழ்த்து



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக, ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட, அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா (ACJU) (இஸ்லாமிய சமய அறிஞர்கள் பேரவை) தனது வாழ்த்தை தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வெ ளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

உங்கள் தலைமையின் மீது தாய் நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு குறிப்பிடத்தக்க இந்த சாதனை ஒரு சான்றாகும்.

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடுகளில் ஒன்றான இங்கு, அதன் குடிமக்கள், தமது தலைவரைச் சுதந்திரமானதும் நியாயமானதுமான ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்களது பதவிக்காலத்தில் அனைத்து குடிமக்களுக்கும் அமைதி, செழிப்பு, ஒற்றுமை ஆகியவை ஈண்டு குறிப்பிடப்படக் கூடியவையாக அமையும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், இஸ்லாமிய சமய அறிஞர்கள், இலங்கை வாழ் முஸ்லிம்கள் நம்புவதுடன் அதற்காகப் பிரார்த்தனையும் செய்கின்றோம்.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், "உங்கள் ஆட்சியாளர்களில் சிறந்தவர்கள், நீங்கள் யாரை விரும்பி, அவர்களும் உங்களை நேசிப்பார்களோ, அவர்களேயாவர்." என குறிப்பிட்டுள்ளார். (நூல்: ஸஹீஹ் முஸ்லிம்)

உங்கள் தலைமையின் கீழ், நீதி, இரக்கம் நிலைநிறுத்தப்பட்டு பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என அனைத்து மதத்தினரையும் உள்வாங்கி ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு சமூகம் உருவாக்கப்படும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா நம்புகிறது.

இந்த நாட்டில் 100ஆண்டுகளுக்கும் மேலாக, இஸ்லாமிய சமய மற்றும் சமூகப் பணிகளில், ஜம்இய்யா ஈடுபட்டுவருவதுடன் சட்டப்பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்களுக்கும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது.

குறிப்பாக சமூகங்களுக்கு இடையிலான சகவாழ்வை வலுப்படுத்தல், தேசாபிமானம், மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தலின்போது என்றும் கைகோர்த்துப் பணியாற்றி வருகிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் தனது கிருபையின் மூலம், இந்தத் தேசத்தை ஒளிமயமான, வளமான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்த உங்களுக்கும் உங்களுடன் இணைந்து செயற்படும் குழுவுக்கும் சிறந்த ஞானத்தையும் ஆற்றலையும் தந்தருள்வானாக! என குறிப்பிட்டுள்ளது.

## இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை;

### ஓய்வை அறிவித்த மைத்திரி



இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லையெனவும், எனினும் அரசியலிலிருந்து ஓய்வு பெறப்போவதில்லையெனவுமம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய ஜனாதிபதிக்கு பல பாரிய சவால்கள் உள்ளதாகவும், எதிர்காலத்தில் மூன்று தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஐந்து மாகாண ஆளுநர்கள் பதவி இராஜினாமா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய ஜனாதிபதியின் பதவியேற்பையடுத்து ஐந்து மாகாணங்களின் ஆளுநர்கள் தமது பதவிகளை நேற்று (23) இராஜினாமா செய்துள்ளனர்.

அதன்படி, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அகமட், ஊவா மாகாண ஆளுநர் அநுர விதானகே ஆகியோரே இவ்வாறு தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர். 06

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இணைய ஊடகவியலாளர் குற்றவாளி




மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக, உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுளைக் கொண்ட கட்டுரையொன்றை இணையத்தில் பதிவேற்றியதற்காகக் குறிப்பிடும் இணைய ஊடகவியலாளரான டெஸ்மன்ட் சதுரங்க டி அல்விஸ் என்ற நபருக்கு, நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் குற்றவாளி என தீர்ப்பளித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான சோபித ராஜகருணா, மேனகா விஜேசுந்தர மற்றும் மாயாதுன்னே கொரியா ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவரை குற்றவாளி என தீர்ப்பளித்த நீதிமன்று, இதுபோன்ற அவமதிப்புக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் தண்டிக்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 திகதியன்று lankanewsweb.org இல் பதிவேற்றிய இணையக் கட்டுரையின் அடிப்படையில், சட்டமா அதிபரால், அரசியலமைப்பின் 105 (3) ஆவது பிரிவின் கீழ் இணைய ஊடகவியலாளருக்கு எதிராக மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சாயா ஸ்ரீ நம்முனியுடன் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலான் ரத்நாயக்க ஆஜராகினர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதி அநுரவுக்கு அமெரிக்கா வாழ்த்து



இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

மேலும், வாக்களிக்கும் உரிமையை அமைதியான முறையில் பயன்படுத்திய இலங்கை மக்களையும் தாம் பாராட்டுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் உத்தியோகபூர்வ தளத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 20

### குறள் தரும் சிந்தனை

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்

உதவியாக ஒருவருக்குக் கொடுக்கப்படுவதைப் பார்த்துப் பொறாமை கொண்டால் அந்தத் தீய குணம், அவனை மட்டுமின்றி அவனைச் சார்ந்திருப்போரையும் உணவுக்கும், உடைக்கும்கூட வழியில்லாமல் ஆக்கிவிடும்.

## மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் காலம்

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவாகியுள்ளதை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம். ஏ.எல். ரத்நாயக்க நேற்றுமுன்தினம் மாலையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து தேர்தல் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விஷேட உரையாற்றினார். மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அபேட்சகர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஆற்றிய முதல் உரை அதுவாகும்.

அது வரலாற்று முக்கியத்துவம் மிக்க உரையாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த உரையின் போது, 'இந்த மண்ணுக்கு புத்தம் புதிய ஆரம்பமொன்று அவசியமாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம்களாகிய எம்மனைவரதும் ஒன்றுசேர்ந்த வலிமை நாம் ஆரம்பிக்கின்ற யுகத்தின் அடிக்கல்லாக அமையும். அதன் மீது தான் புதிய மறுமலர்ச்சி யுகம் கட்டியெழுப்பப்படும். வாருங்கள் நாங்கள் அதற்காக கைகோர்த்துக் கொள்வோம்' என்று அழைப்பு விடுத்தார்.

உண்மையில் இந்நாட்டுக்கு புத்தம் புதிய ஆரம்பம் மிகவும் அவசியமானது. அதுவே நாட்டு மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாகும். குறிப்பாக கடந்த 76 வருடங்களின் எதிர்பார்ப்பு அது. அத்தகைய மாற்றம், ஆரம்பம் இல்லாததன் காரணமாகவே இந்நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இதே நிலையில் காணப்படுகிறது. கடந்த காலத்தில் இந்நாடு பல ஆட்சியாளர்களைக் கண்டுள்ள போதிலும் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய மாற்றமோ ஆரம்பமோ ஏற்படவில்லை. அதன் விளைவாக நாடு தொடர்ந்தும் பின்னடைவுக்கு உள்ளானது. அது ஆட்சியாளர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலையை ஏற்படுத்தியது.

இந்தச் சூழலில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதனை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவை அடித்தளமாகக் கொண்டு உருவாக்க வேண்டும் என மக்கள் உறுதியாகத் தீர்மானமெடுத்தனர். அதனை அடிப்படையாகக் கொண்டு அனைத்து மக்களும் வாக்களித்து அவரை மேலதிக வாக்குகளால் வெற்றி பெறச் செய்துள்ளனர்.

குறிப்பாக இந்தத் தேர்தல் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களைப் போன்றல்லாது ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் மிகவும் குறைந்த அமைதியான தேர்தலாக அமைந்திருந்தது. வாக்களிப்பு தினத்தில் கூட கடந்த காலங்களைப் போன்றல்லாது வாக்காளர்கள் சுறுசுறுப்புடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். அதாவது அவர்கள் ஏற்கனவே உறுதியான தீர்மானத்தை எடுத்திருப்பதை அவர்களது வாக்களிப்பு வெளிப்படுத்தி நின்றது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் உறுதியான மாற்றத்தையும் ஆரம்பத்தையும் ஏற்படுத்துவதை மக்கள் உறுதியான நம்பிக்கையை எடுத்துக்காட்டியது.

அந்த வகையில் நாட்டின் பெரும்பாலான மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள ஜனாதிபதியின் உரை, அவர்களது எதிர்பார்ப்புக்கு பலம் சேர்ப்பதாக அமைந்திருந்தது. அதனை அனைத்து மக்களும் வரவேற்றுள்ளனர்.

அதேநேரம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலும், 'எமது நாட்டின் ஜனநாயகத்தின் மிக முக்கியமான பண்பு மக்கள் தம்மை ஆள்வதற்கான ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதே என்பதை நாமறிவோம். எனினும் தேர்தலில் வாக்குகளை அளித்தல் மற்றும் ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்ளுதல் என்பவற்றால் மாத்திரம் ஜனநாயகம் முற்றுப்பெற மாட்டாது.

அது ஜனநாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாக இருந்த போதிலும் எமது நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காக கட்டமைப்புக்களின் பலம் பொருந்திய தன்மை அதைப்போலவே சட்டங்களின் பலம்வாய்ந்த தன்மை அவசியமென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்நாட்டின் ஜனநாயகத்திற்காக எனது உச்சளவிலான அர்ப்பணிப்பினை எனது பதவிக்காலத்தில் வெளிக்காட்டுவேன். நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தம் மீது நம்பிக்கை வைக்காத மக்களின் மனதில் நம்பிக்கையை உருவாக்கும் வகையிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்புகக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் ஜனாதிபதி பதவி ஏற்பு வைபவத்திலும் ஜனாதிபதி ஆற்றியுள்ள உரை மக்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மேலும் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஆகவே புதிய அரசியல் கலாசாரத்துடன் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் காலம் வெகுதொலைவில் இல்லை என உறுதிப்படக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டில் ஜனநாயகத்தை முறையாக பாதுகாப்பேன்

## பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதி

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்றுக்காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அனைத்து நாடுகளுடனும் மற்றும் அனைவருடனும் ஒன்றிணைந்து பொதுக்கொள்கையுடன் செயற்படப் போவதாக உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்றுக் காலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி பதவிப்பிரமாண நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.





பதவியேற்பைத் தொடர்ந்து உரையாற்றிய அவர், "தேர்தலை நடத்துவதும், ஜனாதிபதியைத் தெரிவு செய்வதும் மாத்திரம் ஜனநாயகமல்ல. எனது ஆட்சியில் ஜனநாயகத்தை முறையாகப் பாதுகாப்பேன். எனக்கு ஆதரவளித்த மற்றும் ஆதரவளிக்காத அனைத்து பிரஜைகளையும் இலங்கையர் என்ற அடிப்படையில் பேதமற்ற வகையில் ஒன்றிணைத்து செயற்படுவேன்" என்று குறிப்பிட்டார்.

"சவால்மிக்க பொருளாதார சூழலில் ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளேன். அனைவருடனும் ஒன்றிணைந்து பயணிப்போம். நாடு என்ற ரீதியில் தனித்து செயற்பட முடியாது. அனைத்து நாடுகளுடன் ஒன்றிணைந்து பொதுக் கொள்கையுடன் செயற்படுவேன். நாட்டுக்காகக் கட்டம் கட்டமாக அனைவரும் ஒன்றிணைய வேண்டும், அதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்விதமிருக்க, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பதவியேற்பை முன்னிட்டு அவரது ஆதரவாளர்கள் பலர் நேற்றுக் காலை காலிமுகத்திடல் பகுதியில் திரண்டு நின்று தமது ஆதரவை வெளிப்படுத்தியதைக் காண முடிந்தது. 'நாடு அநுரவுக்கே' என்ற வாசகம் அடங்கிய பதாதைகள் மற்றும் இலங்கையின் தேசியக் கொடியுடன் உற்சாகமான வரவேற்பை ஆதரவாளர்கள் வழங்கியுள்ளனர்.

புதிய ஜனாதிபதிக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து வாழ்த்துச் செய்திகள் குவிந்த வண்ணமுள்ளன. இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகளிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துச் செய்தியில் 'இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமைக் கொள்கை, இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான முன்னெடுப்பு ஆகியவற்றில் இலங்கைக்கு சிறப்பிடம் உள்ளது. இந்நிலையில், இரு நாட்டு மக்கள் மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் நலனுக்காக இந்தியா, இலங்கை இடையிலான பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அநுரகுமாரவுடன் நெருங்கிப் பணியாற்ற ஆவலாக உள்ளேன்' எனப் பதிவிட்டுள்ளார்.

இந்தியப் பிரதமரின் வாழ்த்துக்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, "பிரதமர் மோடி அவர்களே, உங்கள் அன்பான வார்த்தைகளுக்கும் ஆதரவுக்கும் நன்றி. நமது நாடுகளுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கான உங்கள் உறுதிப்பாட்டை நான் பகிர்ந்து கொள்கிறேன். ஒன்றாக, நமது மக்கள் மற்றும் முழு பிராந்தியத்தின் நலனுக்காக ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் நாம் பணியாற்றலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்ககு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது

அமெரிக்காவின் உத்தியோகபூர்வ தளத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "அநுரகுமாரவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளோம். வாக்களிக்கும் உரிமையை அமைதியான முறையில் பயன்படுத்திய இலங்கை மக்களை நாங்கள் பாராட்டுகிறோம். ஒரு நிலையான, வளமான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உட்பட பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க நேற்றுப் பதவியேற்றதையடுத்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அவரது ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஜே.வி.பி அலுவலகத்தில் பொங்கல் பொங்கி அவரது ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டம் நடத்தினர்.

## எளிமையான முறையில் நடைபெற்ற நிகழ்வு; ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டம்





# சவூதியின் கடந்தகால சாதனைகளை பறைசாற்றும் 94ஆவது தேசிய தினம்

சவூதி அரேபியா தனது தேசிய தினத்தை வருடந்தோறும் செப்டெம்பர் 23ஆம் திகதி கொண்டாடி வருகிறது. 'நாங்கள் கனவு காண்கிறோம், அதனை அடைந்து கொள்கிறோம்| We Dream, We Achieve' என்ற கருப்பொருள் தாங்கி கொண்டாடப்படும் இத்தேசிய தினமானது, சவூதியின் கடந்த கால சாதனைகளை பறைசாற்றும் விதமாகவே அமைந்துள்ளது.



1932 ஆம் ஆண்டில் மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் அமைக்கப்பட்ட சவூதி அரேபியாவிற்கான அடித்தளமானது பாலைவன பூமியை ஒரு செழிப்பான தேசமாக மாற்றியமைக்கின்ற கனவை நனவாக்கியுள்ளது.

இன்று, மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோர் தலைமையில், சவூதி அரேபியா சர்வதேச அரங்கில் முக்கிய இடம் வகிக்கக் கூடிய நாடாக மாறியிருக்கிறது. சவூதியின் விஷன் 2030 திட்டமானது இதற்கு பெரிதும் உறுருதுணையாக இருந்தது. விஷன் 2030 திட்டமானது பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துதல், எண்ணெய்ப் பொருளாதாரத்தில் சாரந்திருப்பதை குறைத்தல் மற்றும் சுற்றுலா, பொழுதுபோக்கு, தொழில்நுட்பம் போன்ற துறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

சவூதி அரேபியா இன்று முன்னேற்றகளையும் மாற்றங்களையும் கண்டிருக்கிறது. அந்த வகையில் பெண்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தியுள்ளது, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அதிகாரத்துடன் கூடிய தலைமைப் பொறுப்புகளுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில சட்டங்களில் நெகிழ்வுத் தன்மை சீர்திருத்தங்கள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு விஷன் 2030 திட்டத்தின் பரந்த இலக்குகளுடன் இணைந்து பெண்களின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

சவூதியின் பசுமை முன்முயற்சித் திட்டமானது மற்றொரு இலட்சியத் திட்டமாகும். இது நிலைத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டது.



சவூதி அரேபியா உலகளாவிய பொருளாதார துறையின் குறிப்பிடத்தக்க சக்தியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. $500 பில்லியன் செலவில் அமையும் மாபெரும் நகர திட்டமான NEOM திட்டமானது புத்தாக்கம், தொழில்நுட்பம் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியில் உலகில் முன்னணி வகிக்க வேண்டும் என்ற சவூதியின் இலட்சியத்தின் சின்னமாகும். சவுதி அரேபியா தனது பாரம்பரியத்தை தக்கவைத்துக் கொள்ளும் அதேவேளை தனது நாட்டின் கலாசாரத் துறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. First Saudi State மற்றும் Diriyah Gate போன்ற வரலாற்று ரீதியான திட்டங்கள் மற்றும் முயற்சிகள் நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியத்தை காட்டுகின்றன. அதேசமயம் ரியாத் சீசன் மற்றும் ஜித்தா சீசன் போன்ற நிகழ்வுகள் சவூதியை உலகளாவிய கலாசார மற்றும் பொழுதுபோக்குத் தளமாக மாற்றியுள்ளன.

கடந்த காலத்தில் சவூதி அரசால் தடைசெய்யப்பட்டிருந்த திரைத்துறை இப்போது செழித்து வருகிறது. உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் சவூதி அரேபியாவின் மனிதாபிமான முயற்சிகள் பாராட்டப்பட்டு வருகின்றன. நெருக்கடியில் உள்ள நாடுகளுக்கு உதவி மற்றும் நிவாரணம் வழங்கும் உலகின் தலைசிறந்த நன்கொடையாளர்களில் சவூதி தொடர்ந்தும் இடம்பிடித்து வருகிறது.



'நாங்கள் கனவு காண்கிறோம், அதனை அடைந்து கொள்கிறோம்' என்ற கருப்பொருள் ஒரு மகுட வாசகம் மட்டுமல்ல மாறாக இது இராச்சியத்தை முன்னோக்கி செலுத்தும் ஒரு சக்தியின் பிரதிபலிப்பாகும்.

சவூதி அரேபியாவின் எதிர்காலத்தை நோக்கிய பார்வை நம்பிக்கையுடன் கூடியதாக இருக்கிறது. அதன் கனவுகள் தைரியத்தாலும் முயற்சியாலும் நனவாக்கப்பட்டவையாக உள்ளன. இந்த தேசிய தினத்தில், சவுதி அரேபியா தனது கடந்த காலத்தை மட்டுமல்ல, வரம்பற்ற எதிர்கால அடைவுகளுக்கான சாத்தியக்கூறுகளையும் கொண்டாடுகிறது. கனவு காண்பதில் இருந்து அதனை அடைவதற்கான பயணம் தொடர்ச்சியானது. அந்தப் பயணமானது முன்னேற்றத்திற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் வழிநடத்தப்படுகிறது.

காலித் ரிஸ்வான்...

# "தூய்மை என்பது வெளிப்புற சடங்குடன் தொடர்பானதல்ல"

## திருத்தந்தை பிரான்சிஸ்



தூய்மை என்பது வெளிப்புற சடங்குகளுடன் தொடர்பானது அல்ல என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

செபத்திலும் வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களிடம் தன்மையாக நடந்துகொள்வதிலும், பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களை மரியாதையாக நடத்துவதிலும் நமது தூய்மையான வாழ்க்கையை நாம் வெளிப்படுத்த வேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

தூய்மையான, மென்மையான, அன்பான வாழ்க்கைக்காக நாம் படைக்கப்பட்டுள்ளோம் என்றும், தூய்மை என்பது வெளிப்புறச் சடங்குகளுடன் தொடர்புடையது அல்ல மாறாக உள்புற மனநிலையுடன் தொடர்புடையது என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

வத்திக்கான் புனித பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய செப உரையின்போது இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை, மாற்கு நற்செய்தி எடுத்துரைக்கும் மூதாதையர் மரபு குறித்த இறைவார்த்தைகள் பற்றி விளக்கமளித்தார்.

தீட்டு, தூய்மை ஆகிய இரண்டும் அக்காலத்தில் வாழ்ந்த மதத்தலைவர்கள் கடுமையாகக் கடைப்பிடித்த விடயமாக இருந்தது அவர்கள், அதனாலேயே இயேசுவின் சீடர்கள் கழுவாத கைகளால் உண்பதைக் குற்றம் சாட்டினார்கள்.அத்தகையவர்களிடம் இயேசு தூய்மை குறித்த கருத்துக்களை எடுத்துரைத்தார்.

தூய்மை என்பது வெளிப்புற சடங்குகளுடன் தொடர்புடையது அல்ல, உள்புற மனநிலையுடன் தொடர்புடையது.தூய்மையாக இருக்க நினைக்கும் ஒருவர் தனது இதயத்தில் பேராசை, பொறாமை, செருக்கு போன்ற தீய உணர்வுகளையோ, வஞ்சகம், களவு, காமவெறி, பழிப்புரை போன்ற தீய எண்ணங்களையோ வைத்திருந்தால், மீண்டும் மீண்டும் கைகளைக் கழுவுவதனால் ஒருபயனும் இல்லை.

இத்தகைய வழக்கமான தீய எண்ணங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கும் வண்ணம் இயேசுவின் செயல் இருக்கின்றது இத்தகைய தீச்செயல் ஒருவரை நன்மையில் வளரச் செய்யாது; மாறாக, தன்னையும் பிறரையும் புறக்கணிக்கவோ அல்லது நியாயப்படுத்தவோ வழிவகுக்கும்.

மேலும், அறத்திற்கு முரணானவைகளாகவும், ஆன்மாவைக் காயப்படுத்துபவைகளாகவும், இதயத்தை மூடுகின்றவைகளாகவும் இத்தீச்செயல்களின் அணுகுமுறைகள் இருக்கும்

இத்தகைய தீய எண்ணங்களுடன் திருப்பலிக்குச் சென்று பங்கெடுத்து ஆலயத்திலிருந்து வெளிவரும் மனிதர் எத்தகைய மாற்றத்தையும் பெறுவதில்லை, மாறாக பிறரைப் பற்றிய இரக்கமற்ற கொடிய அவதூறுகளையும், தொடர்ந்து செய்கின்றார்.

இதற்கு மாறாக செபத்திலும், வீட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களிடம் தன்மையாக நடந்துகொள்வதிலும், பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களை மரியாதையாக நடத்துவதிலும் நமது தூய்மையான வாழ்க்கையை வெளிப்படுத்த வேண்டும்.

எனது நம்பிக்கையை நான் தொடர்ந்து வாழ்கின்றேனா? தூய ஆவியின் துணையால் எனது வெளியுலக வாழ்விலும் செயல்பட முயற்சிக்கின்றேனா? என் உணர்வுகள், வார்த்தைகள் மற்றும் படைப்புகளால், என் சகோதர சகோதரிகளுடனான என் நெருக்கத்தையும் மரியாதையையும் உறுதிப்படுத்துகிறேனா? என்பன போன்ற கேள்விகளை நமக்குள் கேட்டு சிந்திப்பது அவசியம்.

புனித கன்னி மரியாள் உணர்வு பூர்வமான மற்றும் செயல்படுத்தப்பட்ட அன்பினால் நமது வாழ்வு கடவுளுக்கு மிக விருப்பமான ஒரு வழிபாடாக மாற உதவ வேண்டும் என்றும் திருத்தந்தை மேலும் தெரிவித்தார்.

மெரினா ராஜ்

# அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் திருவிழா

## செப்டம்பர் 29 இல் திருச்சபை சிறப்பிக்கின்றது



நம் ஒவ்வொருவருக்காகவும் ஒரு தூதர் நியமிக்கப்பட்டுள்ளார் என்கிறது வேதம்.

இந்த தூதர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு பணியையும் மேற்கொண்டு வருவதைப் பார்க்க முடியும். அந்த வகையில் மிக்கேல் தூதர் போராடினார். கபிரியேல் தூதர் அறிவித்தார், ரபேல் தூதர் குணமாக்கினார் என்கிறது வேதம்.

இறைவன் இந்த தூதர்களின் வழியே நம்மை பாதுகாத்து குணமாக்கி, பராமரித்து வருகின்றார்.

கி.பி.404 ஆண்டு சிபான்றோ நாட்டு மக்கள் பக்கத்து நாட்டவரிடமிருந்து பல்வேறு விதமான அச்சுறுத்தல்களைச் சந்தித்தார்கள். எப்போது வேண்டுமானாலும் தங்கள் நாட்டின்மீது பக்கத்து நாட்டவரால் போர்மூளும் என்றதொரு நிலை ஏற்பட்டது.

இதனால் சிபான்றோ நாட்டு மக்கள் தங்கள் ஆயரை அணுகி, புனித மிக்கேல் அதிதூதரிடம் தங்களுக்காக மன்றாடும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படி ஆயரும் சிபான்றோ மக்களுக்காக புனித மிக்கேல் அதிதூதரிடம் பரிந்துபேசினார்.

அடுத்தநாள் காலை எதிரி நாட்டவர் சிபான்றோ நாட்டு மக்கள்மீது போர்தொடுக்கத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிர்பாராத விதமாக வானத்திலிருந்து இடியும், மின்னலும், பெருமழையும் விழுந்தது. இதனைச் சற்றும் எதிர்பார்த்திராத எதிரிநாட்டுப் படையினர் பின்வாங்கத் தொடங்கினார்கள். இதனால் சிபான்றோ நாட்டின்மீது போர்மூளும் அபாய நிலை நின்றது.

மக்கள் அனைவரும் புனித மிக்கேல் அதிதூதர் வழியாக கடவுள் தங்களுக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி துதி பாடினார்கள்.

இன்றைக்கும் கூட சிபான்றோ மக்கள் கடவுளிடமிருந்து புனித மிக்கேல் அதிதூதர் வழியாக பல்வேறு நன்மைகளைப் பெற்று வருகிறார்கள்.

திருச்சபையானது எதிர்ப்படி 29ஆம் திகதி அதிதூதர்களான புனிதர்கள் மிக்கேல், கபிரியேல் மற்றும் இரபேல் ஆகியோரின் விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. தொடக்கத்தில் இந்த மூன்று முதன்மைத் தூதர்களின் விழா வேறு வேறு நாட்களில் கொண்டாடப்பட்டு வந்தது.

புனித மிக்கேல் அதிதூதரின் விழா செப்டம்பர் 29 ஆம் திகதி அன்றும், தூய கபிரியேல் அதிதூதரின் விழா மார்ச் 24 ஆம் திகதியிலும் புனித இரபேல் அதிதூதரின் விழா அக்டோபர் 21 ஆம் திகதியிலும் கொண்டாடப்பட்டு வந்தது.

ஆனால் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உரோம் நகரில் அனைத்துப் புனிதர்களுக்குமான ஆலயம் கட்டப்பட்ட பிறகு மூன்று அதிதூதர்களின் விழாக்களும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 29 ஆம் திகதி கொண்டாடப்படும் நிலை ஏற்பட்டது.

இந்த மூன்று அதிதூதர்களின் விழாவைக் கொண்டாடும் வேளையில் இறைவார்த்தை நமக்குத் தரும் செய்தி என்னவென்று சிந்தித்துப் பார்த்தால்;

தூதர்கள் என்றால் அவர்கள் கடவுளின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு கடவுளின் பணியை சீராகச் செய்யக்கூடியவர்கள் (திருப்பாடல் 103:20). அந்த வகையில் புனித மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகிய மூன்று முதன்மைத் தூதர்களும் இறைவார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அவர் சொன்ன பணியைச் சிறப்பாக செய்தார்கள்.

அருட்தந்தை சூசை மாணிக்கம்

புனித மிக்கேல் அதிதூதர், இவர் இறைவாக்கினர் தானியேல் புத்தகத்திலும், திருத்தூதரான புனித யூதாவின் புத்தகத்திலும், திருவெளிப்பாடு நூலிலும் அதிகமாக இடம்பெறுகிறார்.

திருவெளிப்பாடு நூலில் விண்ணகத்தில் கடவுளின் தூதர்களுக்கும், அவருக்கு எதிரானவர்களுக்கும் எதிராகக் கலகம் ஏற்படும்போது இவர்தான் கடவுளின் தூதர்படைக்குத் தலைமை தாங்கி, எதிரிகளிடமிருந்து வெற்றியைப் பெற்றுத் தருகின்றார்.

"ஆண்டவருக்கு நிகர் யார்?" என்ற தன்னுடைய பெயருக்கு ஏற்ப புனித மிக்கேல் அதிதூதர் கடவுளின் பெயரை விளங்கச் செய்பவராக இருக்கின்றார்; பகைவர்களிடமிருந்தும், தீய ஆவிகளிடமிருந்தும் நம்மை மீட்பவராக அவர் இருக்கின்றார்.

இன்றைக்கும்கூட நமது வீட்டு வாசலில் புனித மிக்கேல் அதிதூதரின் படத்தைத்தான் வைத்திருக்கிறோம். காரணம் அவர் நம்மைத் தீய ஆவிகளிடமிருந்து விடுவிக்கின்றார் என்பதனால் தான். இவர் திருத்தந்தையின் பாதுகாவல் தூதர் என்றும் அறியப்படுகின்றார்.

தூய கபிரியேல் அதிதூரைக் குறித்து சிந்தித்துப் பார்க்கும்போது இவர் "ஆண்டவரின் செய்தியை எடுத்துரைக்கக் கூடியவராக" இருக்கின்றார்.

திருமுழுக்கு யோவானின் பிறப்பை சக்கரியாவிடமும், ஆண்டவர் இயேசுவின் பிறப்பை அன்னை மரியாளிடமும் இவர்தான் எடுத்துரைத்தார். இறைவாக்கினர் தானியேல் புத்தகத்திலும் இவர் இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலைச் செய்தியை அறிவித்ததாக நாம் வாசிக்கின்றோம் (தானி 8:16).




# கடவுளிடமிருந்து வரும் ஞானம் தெய்வத் தன்மை கொண்டது

## "முதல்வராக இருக்க விரும்புபவர் கடைசியானவராகவும் தொண்டராகவும் இருக்கட்டும்" இயேசு

ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்கிறார் கிறிஸ்து.

அப்பா சாகக் கிடக்கிறார்; மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார். மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய பிள்ளைகள் அவருடைய சொத்துக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். இது இன்றைய சமூகத்தில் இயல்பாக நடக்கின்ற விடயம்.

இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாகத் தமது பாடுகளை முன்னறிவிக்கிறார். ஆனால் சீடர்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என்று சண்டைபோட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முதலிடத்திற்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த தம் சீடர்களிடம், "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்கிறார் கிறிஸ்து (மாற் 9:35).

பெரியவர்களையும் சிறியவர்களையும் வேறுபடுத்திக் காட்டும் பண்பு பணிவுடைமையாகும், பெரியவர்கள் என்றும் பணிவுடன் வாழ்வர்; சிறியவர் என்றும் செருக்குடன் வாழ்வர்.

பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
குறள் 978

கடவுளுடைய எண்ணங்களும் வழிமுறைகளும் மனிதருடைய எண்ணங்களிலிருந்தும் வழிமுறைகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவை (எசா 55:89).

மனிதனின் வழி ஆணவத்தின் வழி; கடவுளுடைய வழியோ தாழ்ச்சியின் வழி. முதல் பெற்றோரின் பாவம் ஆணவம், அவர்கள் மனிதர்களாக இருந்தும் கடவுளுடைய நிலையைத் தட்டிப்பறிக்க விரும்பினர். எனவேதான் விலக்கப்பட்ட கனியை உண்டு, பாவத்தையும் சாவையும் இவ்வுலகில் புகுத்தினர்,

அவர்களின் ஆணவ வழிக்கு மாற்று வழியாகக் கிறிஸ்து தாழ்ச்சியின் வழியைப் பின்பற்றினர். அவர் கடவுள் நிலையிலிருந்தும் மனித நிலைக்குத் தாழ்ந்து வந்தார் (பிலி 2:68).

பாவமே அறியாத அவர் உலகின் பாவ மூட்டைகளை எல்லாம் சுமந்து கொண்டு யோர்தான் ஆற்றில் திருமுழுக்குப் பெறச் சென்றார். அதைக் கண்ட திருமுழுக்கு யோவான் அதிர்ச்சி அடைந்தார்.



இறுதி இராவுணவின் போது இயேசு சீடர்களுடைய காலடிகளைக் கழுவினார். அதைக் கண்டு பேதுரு அதிர்ச்சி அடைந்தார், நமது ஆணவத்திற்குத் தேவையான அதிர்ச்சி வைத்தியத்தை அவர் அளித்தார்.

நாம் பெரியவர்களாக அல்ல, குழந்தைகளாக மாறவேண்டும்; இல்லையென்றால், விண்ணரசில் நுழைய முடியாது என்றும், ஒரு குழந்தையைப் போலத் தன்னைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் பெரியவர் என்ற புரட்சிகரமான போதனையையும் வழங்கினார் (மத் 18:34),



"நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" (மத் 11:29) என்று தம்முடைய தனிப்பட்ட பண்பைக் தொட்டுக் காட்டினார்.

இன்றைய குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒருவர் மற்றவரை அடக்கி ஆள விரும்புகின்றனர். இதுதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம். அடக்குமுறை மனிதத் தன்மை கொண்டது அல்ல, அது மிருகத் தன்மை வாய்த்தது.

காட்டிலே கொடிய விலங்குகள் சாதுவான விலங்குகளை வேட்டையாடுகின்றன. மனிதன் என்பவன் பிறரை அடக்கி ஆளாமல் பிறருக்கு விட்டுக் கொடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்த வேண்டும் (கலா 5:15),

பிறரை அடக்கி ஆளும் முறை பிற இனத்தாரின் முறை என்றும், இயேசுவின் சீடர்கள் பிறரை அடக்கி ஆளாமல் பிறருக்குத் தொண்டு ஆற்ற வேண்டும் (மத் 20:2528) என்றும் போதிக்கிறார் கிறிஸ்து.

கடந்த ஞாயிறு இரண்டாம் வாசகத்தில் புனித யாக்கோபு விண்ணக ஞானத்தையும் மண்ணக ஞானத்தையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார் (யாக் 3:1318), மண்ணக ஞானம் பேய்த்தன்மை கொண்டது: அது பொறாமை, மனக்கசப்பு, கட்சி மனப்பான்மை ஆகிய தீய பண்புகளைக் கொண்டது. ஆனால் கடவுளிடமிருந்து வரும் விண்ணக ஞானம் தெய்வத் தன்மையுடையது. அது அமைதி, பொறுமை, இணங்கிப் போகும் தன்மை ஆகிய நற்பண்புகளைக் கொண்டது. கடவுள் தன்மை கொண்டவர்கள் பிறருடன் இணங்கிப் போவர்.

பிறரை அடக்கி ஆள்பவர்கள் தற்காலிகமாக வெற்றி அடைந்தாலும் நிரந்தரத் தோல்வியைத் தழுவுவர், மாறாக, பணிந்து போகிறவர்கள் தற்காலிகமாகத் தோல்வி அடைந்தாலும் நிரந்தரமான வெற்றியை அடைவர் என்று அன்றைய முதல் வாசகமும், பதிலுரைத் திருப்பாவும் சுட்டிக் காட்டுகின்றன.

நீதிமானின் பொறுமையையும் கடவுள் பக்தியையும் கடவுள் பயமற்றவர்கள் இழித்துரைக்கின்றனர், நீதிமானுக்கு எதிர்காலம் இல்லை என்று ஏளனம் செய்கின்றனர். ஆனால் கடவுள் நீதிமான்களை எல்லாவிதத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கிறார்.

"செருக்குற்றோர் எனக்கு எதிராக எழுந்து என் உயிரைப் பறிக்கப் பார்க்கின்றனர். கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கிறார்" (திபா 54:34), தீமைக்குத் தீமை செய்பவர்களுக்கு கிடைப்பது ஒருநாள் இன்பம். தீமையைப் பொறுத்துக் கொள்பவர்களுக்குக் கிடைப்பதோ நிரந்தர இன்பம்.

அருட்பணி வை.இருதயராஜ்

## இவ்வார புனிதர்

# பரிந்துரையின் தந்தை புனித பியோ

புனித தந்தை பியோ ஓர் ஏழைப் பெற்றோருக்கு எட்டாவது தவப் புதல்வராகப். பிறந்தவர், எட்டாவது நாளிலே தன் பணி வாழ்வின் வாழ்க்கை முறை என்ன வென்று அவர் காட்டியுள்ளார். பரிந்துரை செய்வதே தனது பணி, ஆன்ம மீட்பிற்கான பணி ஆர்வமே அவரது வாழ்வை உந்தித்தள்ளியது.



எண்பத்தொரு ஆண்டுகள் இதே பணியைச் செய்து வாழ்வை நிறைவு செய்தாலும் அவர் இறப்பிற்குப் பிறது செய்யப் போவதாகச் சொல்லி பணி வாழ்வை முழுமையாக நிறைவு செய்துவிட்டுப் போனதன் அளவுகோல் என்னவென்று கொள்ளலாம்?

போக்குவரத்து வசதியே இல்லாத நிலையிலும் செப்டம்பர் 23, 1968 ஆம் ஆண்டிலே ஓர் இலட்சத்திற்கும் மேல் அவரது இறுதிப் பயணத்தில் பங்கெடுத்தனர். இவரின் மகிமையின் விழாக்களான முத்திப்பேறு பட்டம், புனிதர் பட்டம் அளிக்கும் விழாக்களில் உரோமை நகரிலுள்ள புனித பேதுரு பேராலயம் மட்டுமல்ல அகில உலகமே மகிழ்ச்சி வெள்ளத்தில் திழைத்தது.

மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டோர் இந்தப் பெரும் விழாக்களில் கலந்து கொண்டார்கள் என்றால் மக்கள் இவர் மேல் வைத்துள்ள பற்று, பாசம், அன்பு. இவரது பரிந்துரையில் உள்ள மேலான நம்பிக்கை. இவ்வளவு சிறப்பு செய்து வாழ்ந்த வாழ்க்கை முறை தான் என்னவென்பதைத் தியானிப்போம்.'நான் இறந்த பிறகு இன்னும் அதிகம் செய்வேன். என் உண்மையான பணி என் இறப்பிற்குப் பிறகே தொடங்கும்' என்று அவரே கூறி இருக்கிறார்.

அவரது மிகச்சிறந்த அறிவுரை 'இறைவேண்டல் செய், நம்பு, கவலைப்படாதே! 'இந்தத் தாரக மந்திரமே அவர் அனுபவித்து வாழ்ந்த வாழ்வின் சாராம்சம் எனலாம். இறைவேண்டல் செய்து நம்பிக்கை கொள்ள ஆரம்பித்து விட்டால் கவலைக்கே இடமிருக்கக்கூடாது. கவலை இருக்குமானால் நம்பிக்கை இல்லை என்றே சொல்ல வேண்டும்.

நம்பிக்கை என்றாலே ஒளிதான். ஒளியேற்றிய பின் கவலையாகிய இருளுக்கு இடமிருக்க முடியாது என்பதே அவர் எமக்கு தரும் நம்பிக்கை.

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு மு.கா ...

ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

நமது தேசத்தின் இதுவரை காலமும் தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்தி செய்யவதற்கான ஒளி தற்போது புதிய அணியினர் ஊடாகப் பாய்ச்சப்படுகின்றது.

நாட்டின் அரசியலில் ஒரு புதிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். பல சவால்களை எதிர்கொள்வதற்கான திராணியை வளர்த்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய இச் சந்தர்ப்பத்தில், பிராந்தியத்துடனும், சர்வதேசத்துடனும் சமாதானத்துக்காக ஒத்துழைக்கும் தோழமையை அனைத்து இலங்கையர்களும் உறுதி பூண்டு கொள்ளவேண்டும்

இதேவேளை, நாம் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கும் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்களுடைய காலத்தையும் நேரத்தை அர்ப்பணித்து, பெறுமதியான வாக்குரிமையைப் பயன்படுத்திய சகல சமூகங்களையும் சேர்ந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சதொச நிறுவனத்தின் தலைவர் இராஜினாமா

லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் தனது இராஜினாமா கடிதத்தை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பிரனாந்துவுக்கு அனுப்பி வைத்துள்ளார். புதிய ஜனாதிபதியான அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பசந்த யாப்பா அபேவர்தன தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பலன்கள்

(24.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தளர்ச்சி அடைந்த காரியங்களில் நண்பர்களின் உதவியுடன் முயன்று வெற்றி காண முற்படுவீர்கள்.

**ரிஷபம் :**
வரவேண்டிய வரவுகள் வந்து மகிழ்விக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அதிகம் முயற்சி இன்றி நடைபெறும்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கக்கூடும்.

**கடகம்:**
சில காரியங்களில் ஏற்பட்ட தளர்வுகளை தகர்க்க தீவிரமாக முயற்சிப்பீர்கள். வரவு வந்தாலும் செலவுகள் பின் தொடரும்.

**சிம்மம்:**
முக்கியமான சமயங்களில் நண்பர்கள் கண்களில் படமாட்டார்கள். முடிவுகளில் கவனம் தேவை நண்பர்களே அனுசரித்து போகாமல் தொல்லைகளை எதிர்கொள்ள நேரிடும்.

**கன்னி:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதில் கவனம் தேவை. உத்தியோகத்தில் விடுமுறையில் சென்ற சக நண்பர் பணியையும் சேர்த்து செய்ய நேரலாம் .

**துலாம்:**
வெளியூர் பயணங்களை தவிர்ப்பதின் நன்மை தரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் விருப்பப்படி நிறுத்தி வைத்த வேலையை செய்ய வேண்டியது இருக்கலாம்.

**விருச்சிகம்:**
முக்கிய செயல்களை தள்ளி வைப்பது நல்லது. உத்தியோகத்தர்களில் சிலருக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த பதவி உயர்வும் இடமாற்றமும் கிடைக்கும்.

**தனுசு:**
வரவேண்டிய தன வரவு காலதாமதமாக உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் வரலாம்.

**மகரம்:**
உத்தியோகத்தில் இருப்பவர்கள் பொறுப்புகளில் அதிக கவனம் செலுத்தாவிட்டால் பிரச்சினைகள் உருவாகலாம்.

**கும்பம்:**
தளர்வடைந்த செயல்களை வெற்றிகரமாக முடிக்க தக்க நண்பர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மீனம்:**
வரவுகள் தாமதமாக கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ள சிலர் விருப்ப ஓய்வு பெற்று அதிக ஆதாயம் உள்ள நவீன தொழில் ஒன்றை தொடங்க ஆர்வம் கொள்வார்கள் .

## NIE திட்டமிடல்...

செப்டம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 323,879 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளிலுள்ள சில வினாக்களை ஒத்த வினாக்களுடன் கூடிய பயிற்சி ஆவணம் பரீட்சைக்கு முன்னர், அலவ்வ பிரதேசத்திலுள்ள மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக, பல்வேறு தரப்பினரும் முன்வைத்த முறைப்பாடுகளுக்கமைய பரீட்சைகள் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், வினாத்தாளை தயாரித்த நிபுணர்கள் குழுவின் இணக்கப்பாட்டுடன் 03 வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை வழங்க பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநுரவின் வெற்றிடத்துக்கு...

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதையடுத்து அவரது பாராளுமன்ற ஆசனம் வெற்றிடமானது.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் விருப்பு வாக்களிப்பில் கொழும்பு மாவட்டத்தில் அடுத்த இடத்திலிருந்த லக்ஸ்மன் நிபுன ஆராச்சி, பாராளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்கவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க...

நடைபெற்றது.

இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வில், சர்வ மதத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் பலர் கொண்டனர்.

ஜனாதிபதியாக பதவிப்பிரமாணமாக செய்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சர்வ மதத் தலைவர்களின் ஆசியைப் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து, நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள் உள்ளிட்ட அதிதிகள் பலர் அவருக்கு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். நாட்டின் 09 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. இந்த தேர்தலில் அநுரகுமார திசாநாயக்க 57 இலட்சத்து 40 ஆயிரத்து 179 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு பங்குச்சந்தையில்...

ஒப்பிடுகையில் 113.63 அலகுகள் ஆகும். அதாவது 1.04 சதவீத அதிகரிப்பாகும்.

*Standard & Poor's Sri Lanka 20* (S&PSL 20) சுட்டெண் 3156.76 அலகுகளாக பதிவானது. 113 நிறுவனங்களின் பங்கு விலைகள் அதிகரித்துள்ளன. 45 நிறுவனங்களின் மதிப்பு குறைந்துள்ளது. அவற்றுள் பங்கு விலைச் சுட்டெண்ணுக்கு அதிக பங்களிப்பை வழங்கிய நிறுவனங்களாக சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.எல்.சி அமைந்திருந்தன.

நேற்று முதல் இரண்டு மணித்தியாலங்களில் 31,512,972 பங்குகளின், வர்த்தக செயற்பாடுகள் இடம்பெற்றன. மொத்த புரள்வு 586 மில்லியன் ரூபாவாக (589,260,760.65) பதிவாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கடந்த வாரம் கொழும்பு பங்குச் சந்தை பல நாட்கள் வீழ்ச்சியடைந்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் அபிலாஷைகள்...

வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நாட்டின் அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பிலும், செயற்றிறனிலும் மாற்றத்தை எதிர்பார்த்து தங்களுக்கு ஆணை வழங்கிய தென்னிலங்கை மக்களைப் போலவே, கடந்த 70 ஆண்டுகால ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்து விடுபட்டு இறைமையுள்ள இனமாக வாழ்வதற்கான ஏதுநிலைகள் தங்களின் ஆட்சிக் காலத்திலேனும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத் தமிழர்களிடையே நிறைந்திருக்கிறது.

விசேடமாக, இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு இனத்தின் வலியுணர்ந்த சக பிரஜையாகவும், எமது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய அரச தலைவராகவும் செயலாற்றும் வகையில், தங்கள் தலைமையிலான ஆட்சிபீடம் கட்டமைக்கப்படுமாயின், அதுவே இந் நாட்டின் சுபீட்சத்துக்கான அடித்தளமாக அமையும். நாட்டின் அரசியல், பொருளாதார தளம்பல் நிலைகளை சமன் செய்வதிலுள்ள சவால்களை எதிர்கொண்டு செயலாற்றத்தயாராவதைப் போன்று, ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை உணர்ந்த மக்கள் தலைவராக, இனவாதமற்ற இலங்கைத் தீவை உருவாக்கும் அரசியல் கூருணர்வு மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், ஈழத்தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில் தங்களின் ஆட்சி மலரும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி அநுரவுக்கு சபாநாயகர்...

என்பது தனது அவதானிப்பு என சபாநாயகர் தெரிவித்துள்ளார். சபாநாயகர் மஹிந்தயாபா தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அநுரகுமார திசாநாயக்க மீது மக்கள் கொண்டுள்ள இந்த நம்பிக்கை ஒரே இரவில் ஏற்பட்டதொன்றல்ல பாராளுமன்ற ஜனநாயகத்தில் நீண்டகாலம் ஈடுபட்டதனால் ஏற்பட்ட விளைவின் பலனாகும். அவருக்கு இந்த நீண்டகாலப் பயணத்தை நிலையான முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான அரசியல் உறுதிப்பாடுள்ளது என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுடன் இலங்கை ஆரம்பிக்கும் இந்தப் புதிய பயணத்திற்கு தனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் சபாநாயகர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன ஆகிய பாராளுமன்ற செயலாளர் குழாமும், புதிய ஜனாதியான அநுரகுமார திசாநாயகவுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையுடன் இணைந்து...

சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. எமது மக்கள் மற்றும் முழு பிராந்தியத்தின் நலனுக்காக எமது பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் விரும்புகிறேன் என இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சீன ஜனாதிபதி ஜின்பிங் வெ ளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

சீன அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள். இருநாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன. இதன்மூலம், இருநாடுகளும் நட்புறவுமிக்க சகவாழ்வு, வேவ்வேறு அளவிலான நாடுகளுக்கிடையிலான பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான சிறந்த உதாரணங்களாகும். நான் இலங்கை சீன உறவுகளுக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்குகின்றேன். உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்களை சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன் என சீன ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பிரிவினைகளை ஊக்குவிக்காத...

குழுவினர், கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தேர்தல் நிறைவடைந்ததையடுத்து, கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நேற்று (23) ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைமை அதிகாரி,

இலங்கையின் 09 ஜனாதிபதித் தேர்தல் இன, மத, பேதங்களை மையப்படுத்தி பிரிவினைகளை ஊக்குவிக்காத, மிக அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாக அமைந்திருந்தது.

தேர்தல் ஆணைக்குழு வெளிப்படைத்தன்மை, செயற்றிறன்மிக்க தன்மையுடன், எவ்வித சந்தேகங்களையும் தோற்றுவிக்காத வகையில் செயற்பட்டது.

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்ட 39 பேரில், பெண் வேட்பாளர்கள் எவரும் உள்ளடங்காமை மிகுந்த கரிசனைக்குரியது. எதிர்வருங்காலத்தில் இதுகுறித்து அவதானம் செலுத்தப்படவேண்டியது அவசியம். 39 வேட்பாளர்களில் சிலர் பிரசார நடவடிக்கைகளைக்கூட முன்னெடுக்கவில்லை. அவர்களுக்காக அரச நிதி செலவிடப்படுவது கரிசனைக்குரிய விடயமாகும். இதனை சீரமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்

இலங்கை வரலாற்றில் நடைபெற்ற மிகவும் அமைதியான தேர்தல் இதுவாகும். திடீரென ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை ஒன்றுக்கொன்றுமுரணானதன்மையைக்காண்பிக்கிறது. தேர்தல் பிரசாரங்களின் போது சம்பள உயர்வு, வட்டி அற்ற கடன் போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கும் போக்கு ஏற்புடையதல்ல.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவுக்கு தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் 5,000 முறைப்பாடுகளும், தேர்தல் தினத்தன்று 600 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன என ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் சிறந்த அரசியல்...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (23) நடைபெற்ற பதவிப்பிரமாண நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார இதனை தெரிவித்தார்.

நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தம் மீது நம்பிக்கை வைக்காத மக்களின் மனதில் நம்பிக்கையை உருவாக்கும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 09 நிறைவேற்று ஜனாதிபதியாக நேற்று (23) உத்தியோகபூர்வமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர், அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க,

ஜனநாயகத்தின் மிக முக்கியமான பண்பு மக்களால் தம்மை ஆள்வதற்கான ஆட்சியாளரைத் தெரிவு செய்துகொள்வதே என்பதை நாம் அறிவோம்.

எனினும், தேர்தலில் வாக்களித்தல் மற்றும் ஆட்சியாளரைத் தெரிவு செய்துகொள்வதால் மாத்திரம் ஜனநாயகம் முற்றுப்பெறமாட்டாது. அது ஜனநாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாக அமைந்தபோதும் எமது நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக கட்டமைப்புக்களின் பலம் பொருந்திய தன்மை அதேபோன்று சட்டங்களின் பலம்வாய்ந்த தன்மை அவசியமென்பதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அந்த வகையில், நான் முதலில் எமது நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். நாட்டின் ஜனநாயகத்துக்காக உச்சளவிலான அர்ப்பணிப்பினை எனது பதவிக்காலத்தில் வழங்குவேன்.

அத்துடன், எமது நாட்டில் தோ்தலொன்றின்போது, அதிகார மாற்றத்தின்போது அது ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற வரலாறு நிலவுகிறது.

அந்தவகையில் ஒருபோதுமே தோ்தலொன்றின்போது இடம்பெறுகின்ற அதிகார மாற்றத்தை எந்தவொரு தலைவரும் நிராகரித்ததில்லை. அதற்கிணங்க செயலாற்றிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையை சுமுகமாக ஏற்றுக்கொண்டு இந்த ஜனநாயக ரீதியான அதிகாரப் மாற்றத்துக்கான அவருடைய அர்ப்பணிப்பையும் முன்மாதிரியையும் வெளிப்படுத்தியுள்ளமைக்காக அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, எமக்கு கிடைத்திருப்பது மிகவும் சவால்கள் நிறைந்த ஒரு நாடு என்பதை நாம் மிக ஆழமாக விளங்கிக்கொண்டுள்ளோம். எமது அரசியலில் இதைவிட தூய்மையாக்கப்படவேண்டிய, மக்கள் பெருமளவில் எதிர்பார்க்கின்ற சாதகமான அரசியல் கலாசாரமொன்றின் தேவை காணப்படுகிறது. நாம் அதற்காக அர்ப்பணிப்பை மேற்கொள்ளத் தயாராகவுள்ளோம்.

எமது நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் குறித்து, நாட்டு மக்கள் மத்தியில் மோசமான ஓர் அபிப்பிராயமே நிலவுகிறது. அது பொருத்தமற்றது என்றே கருத வேண்டியுள்ளது.

எனவே, நாம் மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகவுள்ளோம்.

அத்துடன், எமக்குக் கிடைக்கின்ற இந்த கடும் நெருக்கடியானது வெறுமனே ஓர் அரசாங்கம் அல்லது அரசியல் கட்சி மற்றும் ஒரு தனிநபரால் மாத்திரம் கடந்து செல்லக்கூடியது என்பதை நாம் நம்பவில்லை.

நான் ஒரு மாயாஜால வித்தைக்காரனல்ல என்பதை இதற்கு முன்னரும் நான் தெரிவித்துள்ளேன்.

இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண பிரஜை நான். என்னிடம் ஆற்றல்கள் இருக்கின்றன. அதேபோன்று ஆற்றாமைகளும் இருக்கின்றன. நாம் அறிந்த விடயங்கள் போன்றே அறியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால், என்னுடைய முதன்மைப்பணி ஆற்றல்களை உறிஞ்சியெடுத்து அறிந்தவற்றை ஒன்று திரட்டி மிகச் சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு இந்த நாட்டை முன்னேற்றுவதாகும்.

அதனால், அந்த கூட்டான செயற்பாட்டின் பங்காளியாவதே எனது பொறுப்பாகும். அத்துடன் இந்த நெருக்கடியை நிவர்த்தி செய்யும் பாரிய பொறுப்பு அனைத்துத்துறைகளையும் சோ்ந்தவர்களுக்கும் உள்ளது என்பதை நினைவூட்டுகின்றேன்.

எமது நாட்டுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமானது. உலகில் எத்தகைய பிளவுகள் ஏற்பட்டாலும் எமக்கு நன்மை பயக்கும் வகையிலேயே எமது வெளியுறவுக் கொள்கைகள் முன்னெடுக்கப்படும்.

எமது தேவை உலகின் அடிமைப்பட்ட நாடாக நாட்டை முன்னெடுப்பது அல்ல. உலகத்துடன் ஒற்றுமையாக சுமுகமாக இணைந்து முன்னாள் செல்லக்கூடிய நாடாகும். அதற்கான தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நாம் ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லை.

எமது நாட்டை கட்டியெழுப்புவதில் நாம் விவசாயிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு பாரிய பொறுப்புகளை ஒப்படைத்துள்ளோம். இதில் அவர்கள் பூரண பங்களிப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எமது நாட்டின் ஜனநாயக வழிமுறை மூலம் மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளார்கள். அதற்காக மக்கள் எனக்கு வாக்களித்துள்ளார்கள். எனக்கு வழங்கப்படாத வாக்குகளும் உள்ளன. அது தொடர்பாக எனக்கு சிறந்த புரிந்துணர்வு உள்ளது.

அதனால் எனது பதவிக்காலத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நான் நிறைவேற்றுவேன். எனக்கு வாக்களிக்காதவர்கள் என்னை நம்பாதவர்களின் ஒத்துழைப்பையும் நம்பிக்கையும் வெற்றிகொள்ள முடியும் என நான் நம்புகின்றேன். எதிர்காலத்தில் அதன் பயன்களை நாம் அனுபவிக்க முடியும். அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதி அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## பிரதமர் பதிவியை...

9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், அரசியலமைப்பின் 47 (2) ஆவது சரத்தின் பிரகாரம் தனது பதவியை இராஜினாமா செய்வதாக தினேஸ் குணவர்தனவின் தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## முதலாவது முஸ்லிம் .... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபவாஹினி தொலைக்காட்சி ஆரம்பமான காலத்திலேயே, தொலைக் காட்சியில் செய்திவாசித்த முதல் முஸ்லிம் பெண் அறிவிப்பாளர் என்றபெருமையும் இவருக்குண்டு

ரூபவாஹினியில் ஒளிபரப்பான பல பிரபல நாடகங்களுக்கு இவர் எழுதிய தமிழ் மொழியிலான மொழி பெயர்ப்பே காட்சி படுத்தப்படும். தமிழ் மொழியோடு, ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்.

## ஐந்து மாகாண... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், நேற்று முன்தினம் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும் தமது பதவியை இராஜினாமா செய்ததுடன் ஏனைய மாகாண ஆளுநர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்வர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் வெற்றிபெற்ற... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தேர்தல் இலங்கையின் ஜனநாயக அமைப்பின் பலம், அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் குடிமக்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

ஒரு நிலையான, வளமான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்.

ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தேசிய இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் அடிப்படையிலான எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து செயற்பட நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நமது நாடுகளுக்கிடையே பொருளாதார, பாதுகாப்பு மற்றும் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தலுக்குப் பின்னர்... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பல்வேறு சட்ட மீறல்கள், வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளபோதும், இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் இதுவரை எவ்வித முறைப்பாடும் பதிவாகவில்லை.

அதனால் தேர்தலுக்கு பின்னரான இக் காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாக செயற்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். ஒட்டுமொத்த தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டமீறல்கள் மற்றும் பயமுறுத்தல், அச்சுறுத்தல்கள் என எமது பெப்ரல் நிறுவனத்துக்கு 1800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகளில் அரச அதிகாரம், அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் மற்றும் சமூக வலைத்தலங்கள் ஊடாக இடம்பெற்ற சம்பவங்களும் அதிகளவில் பதிவாகியுள்ளன.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவானது, தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து தேர்தல் தினத்தன்று வரைக்கும் முக்கிய பங்காற்றியுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடம் காணப்பட்டாலும், தேர்தல் செயன்முறை முழுவதும் சட்டம் ஒழுங்கை வினைத்திறனாகப் பேணுவதற்கும், பக்கச்சார்பற்ற வகையில் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் ஏற்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புடன் செயலாற்றியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை ஒழுங்குபடுத்தல், தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதைக் குறைத்தல், வன்முறைகளைக் குறைத்தல் மற்றும் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாத்தமைக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கும், இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கும் பெப்ரல் அமைப்பு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

அமைதியான தேர்தலை நடத்துவதற்கு, குறிப்பாக ஜனநாயகத்தின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புக் கொண்டு ஒத்துழைப்பு நல்கிய பிரஜைகளுக்கு எமது நன்றிகளை தெவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

# வடக்கிலும் தெற்கிலும் திசையெங்கிலும் உள்ளங்கள் விரும்பிடும் மனிதன் இவரே


விவசாய அமைச்சராக பதவியேற்ற போது...




எல்லே குணவங்ச தேரருடன்...


வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் சட்டத்தரணி சுனில் வட்டவலவுடன்...


நுவர வாவி புனர்நிர்மாணத்திற்காக மண்ணை வெட்டிய போது...


சுகத் திலகரத்னவுடன்


வாக்களிப்பின் பின்னர்










போராட்டத்தில் கலந்து கொண்ட போது


நூல் வெளியீட்டின் போது


விவசாய அமைச்சராக பதவி வகித்தபோது....


நாற்றுமேடை அவதானிப்பு


விவசாயிகளுடன் இணைந்து



(படங்கள் : ருக்மல் கமகே)

# கிழக்கின் குரல்



பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில்

## காட்டு யானைகள் நடமாட்டம்; பொதுமக்கள் அச்சம்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் பிரதேசவாசிகள் உள்நாட்டு ,வெளிநாட்டு உல்லாச பயணிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் மாலை மற்றும் இரவு வேளைகளில் காட்டு யானை தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் சஞ்சரிக்கும் பொத்துவில் உல்லை மற்றும் அறுகம்பை பிரதேசங்களில் காட்டு யானைகள் நடமாடுவதால் பொருளாதார பாதிப்புகள் ஏற்படுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் உட்புகும் காட்டு யானைகள் குடியிருப்புகள் , மதில்கள் மற்றும் பயன்தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக காட்டு யானையின் தாக்கத்தினால் இப்பிரதேசங்களில் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து நேற்று (23) கிண்ணியா புஹாரியடி சந்தியில் கட்சி ஆதரவாளர்கள் திசை காட்டி வடிவிலான கேக் வெட்டி வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

(படம் : தம்பலகாமம் குறூப் நிருபர்)

## புதிய ஜனாதிபதிக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி வாழ்த்து

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி சார்பில் அதன் பொதுச் செயலாளர் இரா. ஜீவன் இராஜேந்திரன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



அவரது வாழ்த்துத் செய்தியில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றி, இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான பதிவாகும். தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு பக்கம் நின்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தாலும், அதிகமான மக்களின் விருப்பத்தைப் பெற்று நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இந்நிலையில் நீங்களே வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் இந்த நாட்டுக்கும் ஜனாதிபதி என்பது இறைவன் அளித்த கொடையாகும்.

இவ்வாறான காலத்தில் இலஞ்சம் ஊழலற்ற நிலையில் சகலருக்கும் சமத்துவமான அரச நிர்வாக முறைமை மலரும் என நம்புகின்றோம். அதேநேரம் தமிழ் பேசும் சமூகங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துவீர்கள் என எதிர்ப்பார்க்கின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியல் கலாசாரமொன்றை நோக்கி பயணிக்க மக்கள் தீர்மானித்துள்ளனர்

(கிண்ணியா மத்திய நிருபர்)

இலங்கை அரசியல் வரலாற்றில், இனவாதம் மற்றும் மதவாதம் சாயம் பூசப்படாத தூய்மையான மக்களாட்சி தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளரும் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினருமான அருண் கேமச்சந்திரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை மக்கள் ஒரு புதிய அரசியல் கலாசாரமொன்றை நோக்கி பயணிப்பதற்கு தீர்மானித்துள்ளார்கள்.



எனவே, நாட்டில் இடம் பெற்ற ஊழல் மோசடி, வீண் விரயம், பிழையான அரசியல் கலாசாரம், பிழையான பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றை மாற்றியமைத்து நாங்கள் சரியான பாதையில் இந்த நாட்டை கொண்டு செல்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

ஒரு காலத்தில் ஒரு சிறிய குழுவாக இருந்து இப்போது, எங்களுடைய அயராத முயற்சியின் காரணமாக தேசம் பேசக்கூடிய ஒரு கட்சியாக வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். இதற்குக் காரணம் மக்களுடைய சக்தியே என்றும் அவர் கூறினார்.

எனவே மக்களின் எதிர்பார்ப்பை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு என் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. எனவே, மக்களின் ஆணையை பெற்ற நாங்கள் அவர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## மாற்று அரசியல் யுகம் படைக்க பல தசாப்தங்களாக போராடி வெற்றி பெற்றுள்ளனர்

### புதிய ஜனாதிபதிக்கு முஷாரப் எம்.பி வாழ்த்து

(ஒலுவில் விசேட நிருபர்)

பல தசாப்தங்களாக மாற்று அரசியல் யுகம் படைக்க முனைப்போடு போராடி புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் வெற்றி ஒரு வரலாற்று சாதனையாகும் என முஷாரப் எம்.பி தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனவாதம், ஊழல் எனும் காட்டுத் தீ புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் துடைத்தெறியப்படும் எனும் நம்பிக்கை சகல இலங்கையர்களுக்கும் பிறந்திருப்பது மாற்றத்தின் முக்கிய அடைவாகும்.



படுகுழியில் வீழ்ந்திருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து, உற்பத்தி பொருளாதாரத்தை மேற்கொண்டு, அதனூடாக ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க முனைவதிலுள்ள சவால்களை தோற்கடித்து இந்த தேசத்தை வெற்றி பெறச் செய்யும் உயர்பணிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு, நாட்டு மக்கள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

புதிய ஜனாதிபதிக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, மலர்ந்திருக்கும் பொழுது இந்த தேசத்திற்கு புது வெளிச்சத்தை தர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய மாணவனுக்கு சர்வதேச கலாம் தங்க விருது



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய மாணவன் அன்வர் அப்னானுக்கு சர்வதேச கலாம் தங்க விருது Kalam Book of Records கிடைத்துள்ளது. சென்னை 'சர்வதேச கலாம் உலக சாதனை விருது' விழாவில் தனது கண்டுபிடிப்புக்களுக்காக கௌரவ விருதினைப் பெற்றுக்கொண்டார். அன்வர் அப்னான் தனது அபாரத் திறமையினால் பல்வேறு கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளதுடன், இவ்விருது அவரது கண்டுபிடிப்புக்களுக்கான சர்வதேச அங்கீகாரமாகும். பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு இளம் வயதில் பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.பொருளாதார ரீதியாக உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் மேலும் பல கண்டுபிடிப்புக்களை இவர் மேற்கொள்வார் என்பது உறுதி.

## முஸ்லிம் மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும்

### கல்முனை தேசிய ஐக்கிய முன்னணி செயற்பாட்டாளர் ஏ.ஆதம்பாவா

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

முஸ்லிம் கட்சித் தலைவர்களால் இனவாதரீதியில் மூளைச்சலவை செய்யப்பட்ட மக்கள் எதிர்காலத்தில் இனரீதியாக சிந்திக்காமல் எல்லோரும் இலங்கையர் எனும் ரீதியில் இவர்களை புறக்கணித்து தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் ஏற்பாட்டாளர் ஏ.ஆதம்பாவா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் போது மேடைகளில் இல்லாத பொய்களையும் கட்டுக்கதைகளையும் கட்டவிழ்த்து முஸ்லிம் மக்களின் வாக்குகளை கொள்ளையடித்து அதன் மூலம் தமது அரசியல் வாழ்க்கையை தொடரவிருந்த இன ரீதியிலான கட்சி தலைவர்களுக்கும் அவர்கள் பின்னால் சென்ற அரசியல்வாதிகளுக்கும் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் சவாலாக அமைந்துள்ளது.



எதிர்வரும் பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது இன ரீதியாக செயற்படும் கட்சிகளுக்கும் அதன் அருவடிகளுக்கும், கூஜாத் தூக்கிகளுக்கும்,தரகர்களுக்கும் முஸ்லிம் மக்கள் விடை கொடுத்து தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி அநுகுமார திசாநாயக்க இந்த நாட்டில் சகல இன மக்களையும் ஒன்றிணைத்து வளமான ஸ்ரீ லங்காவை முன்னெடுத்துச் செல்ல உறுதிபூண்டுள்ளதாக என தெரிவித்தார்.

## மூதூரில் எளிமையான வெற்றிக்கொண்டாட்டம்

(மூதூர் தினகரன் நிருபர்)

ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமையை கொண்டாடும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் மூதூர் காரியாலயத்தில் மிக எளிமையான முறையில் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. பாற்சோறு சமைத்தும், குளிர்பானங்கள் வழங்கியும் ஆதரவாளர்களுடன் வெற்றியை கொண்டாடினர்.

நாட்டின் வெற்றி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றிக்காக உழைத்த பிரதேச மக்களுக்கு மேலும் நன்றியை தெரிவித்துக் கொண்டதுடன் இவ்வெற்றியானது 'நாடு அநுரவோடு' எனும் மக்கள் ஆணையை நிரூபித்துள்ளதாகவும் ஆதவாளர்கள் தெரிவித்தனர்.

## மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய மாணவர்கள் ஆண்கள் பிரிவில் மூன்று புதிய சாதனைகளுடன் 04 தங்கம், 03 வெள்ளி, 02 வெண்கலம் என மொத்தம் 09 பதக்கங்களைப் பெற்றுள்ளதுடன், தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய அதிபர் ஏ.ஜி.பஸ்மில், பிரதி, உதவி அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர், என பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள்



(காரைதீவு குறூப் நிருபர்)

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆசி வேண்டி கல்முனை ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் நேற்று விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சி இன மத பேதமற்ற வகையில் சிறப்பாக அமைய ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடு நடைபெற்றது.

இவ்வழிபாட்டில் தேசிய சமாதான அபிவிருத்தி மையத்தின் தலைவர் வி. ரி. சம்பந்தர் தலைமையில் தேசிய மக்கள் கட்சி செயற்பாட்டாளர்கள், மற்றும் ஆலயங்களின் நிர்வாகத்தினர், புத்திஜீவிகள், ஆதரவாளர்கள் என பலர் பங்குபற்றியிருந்தனர்.

பூஜை வழிபாடுகள் சிவஸ்ரீ ச. கு. ரேவதீசன் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



# ஜனாதிபதித் தேர்தல் 2024


## மாவட்ட மட்டத்தில் பெறுபேறுகளின் சாராம்சம்

(இரண்டாவது விருப்பு வாக்குகளுக்கு முன்னர்)




01
பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை
5,634,915
42.31%

02
பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை
4,363,035
32.76%



03
பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை
2,299,767
17.27%

04
பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை
342,781
2.57%



| யாழ்ப்பாணம் |
|---|
| 121,177 |
| 116,688 |
| 84,558 |
| 27,086 |

| வன்னி |
|---|
| 95,422 |
| 52,573 |
| 36,377 |
| 21,412 |

| அநுராதபுரம் |
|---|
| 285,944 |
| 202,289 |
| 82,152 |
| 15,029 |

| புத்தளம் |
|---|
| 207,134 |
| 173,382 |
| 60,719 |
| 13,285 |

| மாத்தளை |
|---|
| 140,544 |
| 121,803 |
| 53,829 |
| 10,327 |

| குருநாகல் |
|---|
| 544,763 |
| 368,290 |
| 146,520 |
| 38,730 |

| கேகாலை |
|---|
| 247,179 |
| 185,930 |
| 106,510 |
| 11,722 |

| கம்பஹா |
|---|
| 809,410 |
| 349,550 |
| 216,028 |
| 41,193 |

| நுவரெலியா |
|---|
| 201,814 |
| 138,619 |
| 105,057 |
| 8,821 |

| கொழும்பு |
|---|
| 629,963 |
| 342,108 |
| 281,436 |
| 30,432 |

| களுத்துறை |
|---|
| 387,764 |
| 236,307 |
| 143,285 |
| 22,727 |

| காலி |
|---|
| 366,721 |
| 189,555 |
| 107,336 |
| 24,382 |

| மாத்தறை |
|---|
| 287,662 |
| 147,462 |
| 79,249 |
| 14,962 |

| ஹம்பாந்தோட்டை |
|---|
| 221,913 |
| 131,503 |
| 33,217 |
| 26,707 |

| இரத்தினபுரி |
|---|
| 291,708 |
| 257,721 |
| 145,038 |
| 20,575 |

| மொனறாகலை |
|---|
| 140,269 |
| 134,238 |
| 35,728 |
| 12,832 |

| பதுளை |
|---|
| 219,674 |
| 197,283 |
| 115,138 |
| 13,869 |

| கண்டி |
|---|
| 394,534 |
| 323,998 |
| 162,707 |
| 19,023 |

| திகாமடுல்ல |
|---|
| 200,384 |
| 108,971 |
| 86,589 |
| 9,985 |

| மட்டக்களப்பு |
|---|
| 139,110 |
| 91,132 |
| 38,832 |
| 36,905 |

| பொலநறுவை |
|---|
| 130,880 |
| 100,730 |
| 36,908 |
| 5,594 |

| திருகோணமலை |
|---|
| 120,588 |
| 49,886 |
| 40,496 |
| 18,524 |

# வடக்கின் உதயம்

## மாற்றத்தை விரும்பிய மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்

(யாழ் . விசேட நிருபர்)



ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனாநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும் மனதில் நிறுத்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து செயலாற்றியிருந்தோம். ஆனாலும் எமது நம்பிக்கைகளுக்கு மாறாக இலங்கைத் தீவில் வாழுகின்ற மக்களில் கணிசமானவர்கள் ஆட்சி மாற்றம் ஒன்றையே தமது விருப்பமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் மனவிருப்பங்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

அதேவேளை சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி தோழர் அநுரகுமார திசாநாயக்க அனைத்து மக்களினதும் கனவுகளை ஈடேற்றுவார் என்பதையும் எதிர்பார்க்கிறோம்.

எமது வேண்டுகோளை ஏற்று அரசியல் வழி நின்று வாக்களித்த மக்களுக்கும், தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றும் வகையில் வாக்களிப்பில் கலந்து கொண்ட அனைத்து மக்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

இதுவரை காலம் எமது பாராளுமன்ற அரசியலில், தேசிய நல்லிணக்க வழிமுறை வரலாற்றில் அரசுகளுக்கு உள்ளிருந்தும் வெளியே இருந்தும் மக்கள் நலன் சார்ந்து நாம் உறுதியுடன் செயலாற்றி வருகின்றோம்.மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே என்றும் மாறாத எமது அரசியல் இலக்கு என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடற்றொழிலுக்கு சென்றவர் வள்ளத்தில் சடலமாக மீட்பு



(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் வள்ளத்தில் கடற்றொழிலுக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலி மத்தி பகுதியை சேர்ந்த சி. நாகராசா (வயது 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலியிலிருந்து கடற்றொழிலுக்காக வள்ளத்தில் நேற்றுமுன்தினம் மாலை கடலுக்கு சென்றவர் நேற்று வரையில் கரை திரும்பவில்லை.

இதனையடுத்து சக தொழிலாளிகள் மற்றும் உறவினர்கள் அவரை கடலில் தேடிச் சென்ற போது பொன்னாலை கடற்கரை பகுதியில் அவர் வள்ளத்தினுள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியை சேர்ந்த நந்தகுமார் செந்தூரன் (வயது 41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, பேருந்து மோதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## வைத்தியசாலை கட்டடத்திலிருந்து தவறி விழுந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்.குறூப் நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலை கட்டடத்திலிருந்து தவறி விழுந்த பெண் தொழிலாளி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் திருநகர் பகுதியை சேர்ந்த செல்வராசா ரெஜினி (வயது 19) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் தொழிலாளியாக பணியாற்றி வந்த பெண் கடந்த 31ஆம் திகதி வைத்தியசாலை கட்டடமொன்றின் நாலாம் மாடியிலிருந்து தவறி விழுந்துள்ளார்.

தவறி விழுந்ததில் படுகாயமடைந்த பெண்ணை வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்து , சிகிச்சை வழங்கப்பட்டு வந்த போதிலும் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## கடல் தீர்த்தத்தின் போது காணாமல் போன ஆசிரியரின் சடலம் ஒப்படைப்பு



யாழ்ப்பாணம் வல்லிபுர ஆழ்வார் ஆலய கடல் தீர்த்தத்தின் போது, கடலில் மூழ்கி காணாமல் போன ஆசிரியரின் சடலம் உறவினர்களிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான நுணாவில் பகுதியை சேர்ந்த தயாசீலன் வைஷ்ணவன் (வயது 28) என்பவரே இவ்வாறு கடலில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது கடந்த சனிக்கிழமை தமிழக கடற்பரப்பை அண்டிய பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் கரைக்கு கொண்டு வரப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளையடுத்து நேற்றுமுன்தினம் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை கடல் தீர்த்தத்தின் போது குடத்தனையை சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது 54) என்பவரும் கடலில் மூழ்கி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இம்முறை கடல் தீர்த்தத்தின் போது இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தமை பக்தர்கள் இடையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்களுக்கு தண்டப்பணம் விதிப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையமொன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 15 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது, உரிய முறையில் குளிர்சாதனப் பெட்டியை பேணத் தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணப்படாமை, மருத்துவ சான்றிதழ் இன்மை, சுகாதார முறைப்படி உணவு கையாளும் இடப்பரப்பை பேணத் தவறியமை, உபகரணங்களை உரிய முறையில் பேணத் தவறியமை போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக உரிமையாளர்களுக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது 15 உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40ஆயிரம் தண்டப்பணம் விதித்தது.

அதேவேளை ஒரு உரிமையாளரின் உணவகத்திலுள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.







புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றதை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகம் முன்பாக, ஆதரவாளர்கள் பொங்கல் பொங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## தமிழக மீனவர் 37 பேர் நெடுந்தீவு கடலில் கைது

(பருத்தித்துறை நிருபர்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 37 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த சனிக்கிழமை மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து 11 மாத குழந்தை உயிரிழப்பு



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் தண்ணீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் நேற்று (23) காலை இடம்பெற்றுள்ளதோடு, சம்பவத்தில 11 மாத குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தை தனது தாயுடன் குளியலறையில் இருந்த போது தண்ணீர் நிறைந்த தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கியுள்ள நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் மீலாத் விழா







யாழ்ப்பாணத்தில் மீலாத் விழா நிகழ்வுகள் மிக சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

மாணவச் செல்வங்களின் கிராஅத், இஸ்லாமிய கீதங்கள், சந்தர்ப்ப துஆக்கள், கஷீதா,பேச்சு, கவிதைகள் போன்ற நிகழ்வுகளோடு கண்ணியமிக்க உலமாக்களின் சொற்பொழிவும். மாணவர்கள் மத்தியில் அறிவுக் களஞ்சியமும் நடைபெற்றது. அகில இலங்கை ஜம்இய்யதுல் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் என்.எம்.எம்.இர்பான் (நூரி), ஏ.எம்.றழீம் (மக்கி), கலாபூஷணம் பரீட் இக்பால் ஆகியோர் இணைந்து அறிவுக் களஞ்சியப் போட்டியை வெகு சிறப்பாக நடாத்தினர்.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவதை படங்களில் காணலாம்.

(படங்கள் - கலாபூஷணம் பரீட் இக்பால்)

## மன்னாரில் ஜனாதிபதியின் வெற்றிக் கொண்டாட்டங்கள்





(மன்னார் குறூப் நிருபர்)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமையை முன்னிட்டு மன்னாரில் நேற்றைய தினம் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டு தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சில பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

குறித்த நிகழ்வில் ஆதரவாளர்கள், மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி

(ஓமந்தை விசேட நிருபர்)

முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான ஆரம்ப விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், கல்வியியல் துறை, கலைப்பீடத்துடன் இணைந்து முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறியை நடாத்துகின்றது.

கல்வியற்துறை விரிவுரையாளர் கலாநிதி விஜயபாஸ்கரனின் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக, துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராசா,யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், பல்கலைக்கழக திறந்த தொலைக் கல்வி நிலைய பேராசிரியர் ஜெ.றொபின்சன் என பலரும் கலந்துகொண்டனர்.




# காளிகாம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம்




வரக்காப்பொலை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சர்வ மத நல்லிணக்க நிகழ்வின் போது காளிகாம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஒயிலாட்டம் வரவேற்பு நடனம், (பரதம்) வேப்பிலை நடனங்களை மேடையேற்றினார்கள்.

# கொழும்பு செல்ல நுவரெலியாவில் நீண்ட வரிசையில் பயணிகள் காத்திருப்பு

**நானுஓயா நிருபர்**

நுவரெலியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணிப்பதற்கு முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர் .

கடந்த (21) திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு செய்வதற்கு கொழும்பில் இருந்து நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சொந்த ஊர்களுக்கு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வருகை தந்திருந்திருந்தனர்.

இவர்கள் நேற்று (23) திங்கட்கிழமை மீண்டும் கொழும்பு நோக்கி செல்வதற்காக போதிய அளவில் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் கடும் சிரமத்திற்கு உள்ளாகியதோடு நுவரெலியா மத்திய பிரதான பேருந்து நிலையத்திற்கு வந்த பயணிகள் நீண்ட நேரம் தூர சேவை பேருந்துகள் இன்மையால் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். அத்துடன் ஒரே நேரத்தில் அதிக பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்ததால் பேருந்து நிலையத்தில் கடும் நெரிசல் ஏற்பட்டது.




இது குறித்து பயணிகள் கூறுகையில்.

ஒரே நேரத்தில் இவ்வாறு அதிக பயணிகள் பயணம் மேற்கொள்ளும் காலங்களில் தேவைக்கேற்ப மேலதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் காலத்தில் பயணிகள் நலன் கருதி புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தியிருப்பதாக தெரிவித்த போதிலும் போதிய அளவு பஸ்கள் இல்லாததன் காரணமாக நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் இதனால் சிறு பிள்ளைகளுடன் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர். நீண்ட நேரம் காத்திருந்து பேருந்து போதிய அளவில் இல்லாமையால் ஒரு சிலருக்கு மீண்டும் வீடுகளுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பயணிகள் தெவித்தனர்.

# புதிய ஜனாதிபதி பதவியேற்பு: அமைதியான முறையில் கொண்டாட்டம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். இதனையொட்டி இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் நேற்று அமைதியான கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. பிரதான வீதியோரங்களில் மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் இந்த கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

சி ல இடங்களில் பாற்சோறு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. அனைவரும் கட்சி, அரசியல், இன, மத பேத ங்களின்றி இதனை ப ரந்த அளவில் மேற்கொண்டதை கா ணக்கூடியதாக இருந்தது. சிலர் மத ஸ்தலங்களில் புதிய ஜனாதிப திக்காக பிரார்த்தனைகளிலும் ஈ டு பட்டுள்ளனர். இளைஞர்கள் பொதுவான இடங்களில் இதில் ஆர்வமாக ஈடுபட்டதை காணக் கூடியதாக இருந்தது. பட்டாசு கொளுத்துவது , ஊர்வலம் செல்வது போன்ற ஏ னை ய வர்களை சங்கடத்திற்கு உ ள்ளாக்கும் கொண்டாட்டங்கள் இம்முறை இடம்பெறவில்லை.

# கொழுந்து பறித்த 17 பெண்கள் குளவி கொட்டி ஆஸ்பத்திரியில்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டு இருந்த 17 பெண்கள் குளவி கொட்டிய நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 14 பெண்கள் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியதாகவும் மூன்று பெண்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கை தேசிய ஜனநாயக கட்சி வாழ்த்து

**அக்குறணை குறூப் நிருபர்**

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள அநுரகுமார திசாநாயக்காவுக்கு இலங்கை தேசிய ஜனநாயக கட்சி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன் அவருக்காக வாக்களித்த தமிழ் பேசும் மக்களுக்கும் நன்றியையும் தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய ஜனநாயக கட்சியின் தலைவர் நாரா என். அருண்காந் இது பற்றி ஊடகங்களுக்கு கண்டியில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களின் போது தமது கட்சி விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்ப அநேக தமிழ் பேசும் மக்கள் என்.பி.பி. வேட்பாளர் அநுர குமார திசாநாயக்காவுக்கு ஆதரவு தெரிவித்து அவர் வெற்றி பெற பங்களிப்புச் செய்தனர். எனவே எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு திசைகாட்டிக்கு வாக்களித்து அதனை வெற்றி பெறச் செய்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள நீண்ட ஊடக அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



ஆரம்பத்தில் இலங்கை தேசிய ஜனநாயக கட்சி எடுத்த முடிவு தவறானது என பலர் எம்மிடம் தெரிவித்தனர். நாம் உணர்வு பூர்வமாக முடிவுகளை எடுக்காது, தர்க்கரீதியில் சிந்தித்தோம்.

குடும்ப அரசியல், ஊழல், மோசடி, களவு என பலவிடயங்கள் தொடர்பாக சிங்கள மக்கள் வெறுப்படைந்திருந்தனர். இவற்றை ஒழிக்க வேண்டும் என சிங்கள மக்கள் அணி திரண்டிருந்தனர். எமது கட்சி அதனை சரியாக இனம் கண்டு கொண்டது.

எனவே பெரும்பான்மை மக்களின் இந்த அலையை நாமும் பயன்படுத்த வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்த்து வேண்டுகோள் விடுத்தோம். அந்த வகையில் இலங்கை வாழ் தமிழ் மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுக்கு தமது பங்களிப்பை வழங்கினர்.

இலங்கையில் தற்போது காணப்படுகின்ற அரசியல் சம்பிரதாயப்படி நாட்டில் குறிப்பிட்ட சில பதவிகளை சிறுபான்மையினர் பெற்றுக் கொள்வது சாத்தியப்படாத விடயம். எனவே நாம் அரசியலில் 'கிங்மேக்கர்' என்ற வகிபாகத்தை சரியாக மேற்கொள்ள வேண்டும்.

எமது மலையக அரசியல் தலைமைகள் அதனை எமக்குக் காட்டித்தந்துள்ளன. கடந்த காலங்களில் அவ்வாறான அனுபவங்கள் கொண்ட அரசியல்வாதிகள் எம்மத்தியில் இருந்தனர்.

வடபகுதியிலும் கணிசமான மக்கள் என்.பி.பி. க்கு வாக்களித்திருந்தனர். அவர்கள் மாற்று அரசியலுக்கான தேவையை உணர்ந்திருந்தனர். எனவே எமது இலங்கை தேசிய ஜனநாயகட்சியின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து அநுர குமார திசாநாயக்க வெற்றி பெற பங்களிப்பு செய்த தமிழ் பேசும் அனைத்து மக்களுக்கும் எமது கட்சியின் நன்றியைத் தெரிவிக்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு இராதாகிருஸ்ணன் எம்.பி வாழ்த்து

**நுவரெலியா தினகரன் நிருபர்**

நாட்டு மக்களின் வாக்குகளால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு மலையக மக்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிறைவடைந்து மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கும் இந்த நாட்டு மக்களின் பாரிய எதிர்பார்ப்பையும் அவர்களுடைய எதிர்காலத்தை சுபீட்சமாக அமைப்பதற்கும் தாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.



தேர்தலின் பின்பு அனைத்து நாட்டு மக்களையும் கடந்த கால ஜனாதிபதிகளைப்போல இன, மத, மொழி ரீதியாக பாகுபடுத்தாமல் அனைவரையும் ஒரு தாயின் பிள்ளைகளாக நினைத்து செயற்படுகின்ற திறமை உங்களிடம் இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். உங்களுடைய தலைமைத்துவத்தை உன்னிப்பாக கவனித்தமை காரணமாகவும் தாங்கள் அனைவரையும் அரவணைக்கின்ற அந்த உயரிய நிலைமை, மிகவும் எளிமையாக நடந்து கொள்கின்ற தன்மை போன்றவை காரணமாக நாம் 2017 ஆண்டு மலையக மக்கள் முன்னணி நடாத்திய இளைஞர் மாநாட்டிற்கு உங்களை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தோம்.

இந்த நாட்டு மக்களின் நிலைமையை தாங்கள் நன்கு அறிவீர்கள். ஏனெனில் சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்து இன்று இந்த நாட்டின் உயர் பதவியை அடைந்திருக்கின்றீர்கள். எனவே நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் முன்னின்று செயற்படுவீர்கள்.

இந்த நாட்டின் கிராமப்புற பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு இருக்கின்றது. பாராளுமன்ற சம்பிரதாயங்களை மதித்து அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற நிலையில் நீங்கள் செயற்படுவீர்கள். அதற்கான ஒரு நிலைமையை ஏற்படுத்தும் பொழுதும் மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்காக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நாம் முழுமையான ஒத்துழைப்பை தருவதற்கு தயாராக இருக்கின்றோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.





சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி அப்புகஸ்தென்ன டேனாகந்தை அருள்மிகு ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலய ஆவணி விநாயகர் சதுர்த்தி வருஷாபிஷேக பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

# லட்டு சர்ச்சை: திருப்பதி கோயில் சாந்தி ஹோமத்தால் அனைத்தும் தூய்மை ஆகிவிட்டதாக அர்ச்சகர் தகவல்

திருமலை பெருமாள் கோயிலில் சாந்தி ஹோமம் செய்யப்பட்டுவிட்டதால் அனைத்தும் தூய்மையாகி விட்டதாக கோயிலின் தலைமை அர்ச்சகர் கிருஷ்ண சேஷாசல சுவாமி தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியில் திருப்பதி லட்டு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட நெய்யில், விலங்குகளின் கொழுப்பு கலந்திருந்ததாக அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு கடந்த 18ம் திகதி தெரிவித்தார்.

இதையடுத்து இந்த விவகாரம் சர்வதேச அளவில் மிகப் பெரிய விவாதப் பொருளாக மாறியது. இதையடுத்து, கடந்த 20ம் திகதி செய்தியாளர்களிடம் பேசிய திருப்பதி பெருமாள் கோயிலை நிர்வகிக்கும் திருமலா திருப்பதி தேவஸ்தான செயல் அலுவலர் ஷியமலா ராவ், “தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளில் விலங்கு கொழுப்பு மற்றும் பன்றிக்கொழுப்பு இருப்பது ஆய்வக சோதனைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான நான்கு அறிக்கைகளும் ஒரே மாதிரியான முடிவுகளைத் தந்தன. எனவே நாங்கள் உடனடியாக விநியோகத்தை நிறுத்தினோம். மேலும் ஒப்பந்தக்காரரை பிளாக் லிஸ்ட்டில் வைத்துள்ளோம். அபராதம் விதிக்கும் நடைமுறையும் தொடங்கப்படும். அதோடு, சட்டப்படியும் நடவடிக்கை எடுக்கப்படும்” எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து கடந்த 20ம் திகதி செய்தியாளர்களிடம் பேசிய ஜெகன் மோகன் ரெட்டி, “திருப்பதி பெருமாள் கோயில் லட்டு தயாரிக்கப்பட்ட நெய்யில், விலங்குகளின் கொழுப்பு இருந்ததாக வெளியாகி உள்ள அறிக்கை தவறானது. முதல்வர் சந்திரபாபு நாயுடு, மக்களின் நம்பிக்கையை அரசியலுக்காகப் பயன்படுத்துகிறார்” என மறுப்பு தெரிவித்திருந்தார்.

# நகர்வலம்



## அநுராதபுரம் மாவட்டத்தில்
# தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்

திறப்பனை தினகரன் நிருபர்





அநுராதபுரம் மாவட்டத்தில் வசிக்கும் தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் கலத்தேவ மீன் வளர்ப்பு அபிவிருத்தி நிறுவனத்தில் இப்பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. நம் நாட்டின் தொழில் முனைவோரின் எண்ணிக்கையானது உலகில் உள்ள மற்ற நாடுகளின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது, நம் நாட்டில் தொழில் முனைவோர் குறித்து சோகமான சூழ்நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் உலகளாவிய அடிப்படையில் தொழில் முனைவோரின் அளவீடானது வியட்நாமில் 18%, பங்களாதேஷில் 11% மற்றும் தாய்லாந்தில் 27%, இலங்கையில் 2.6% என அளவிடப்பட்டுள்ளது.

தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சித் திட்டத்திற்கு அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 125 பேரில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 30 தொழில் முனைவோரே இப் பயிற்சிக்கு தகுதி பெற்றிருந்தனர்.

தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அலுவலர் எஸ்.என். ஜயரத்ன, தொழில் முனைவோர் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களான எம். ரூபசிங்க மற்றும் திருமதி சடமாலி அநுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த கலத்தேவ, மீன்வளர்ப்பு அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர், ராஜசிங்க ஆகியோர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஜனாதிபதி அநுரவுக்கு ரிஷாட் பதியுதீன் வாழ்த்து



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றி நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஒருமைப்பாட்டையும், அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதன் ஊடாக மக்கள் வழங்கிய ஆணையை அவர் ஈடேற்றுவார் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்றுள்ளார். அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கூறி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச் செய்த ரிஷாட் பதியுதீன், அப்பதிவில் மேலும் கூறியிருப்பதாவது,

'இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். இந்த வெற்றி நாட்டு மக்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடாகும். நாட்டு மக்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதுடன், அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் ஊடாக மக்கள் உங்களுக்கு வழங்கிய ஆணையை உரியவாறு ஈடேற்றுவீர்கள் என நாம் நம்புகின்றோம். உங்களது வெற்றிக்கும், நீங்கள் அளிக்கவிருக்கும் தலைமைத்துவத்துக்கும் வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு சர்வதேச இந்துமத பீடம் வாழ்த்து



09ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்ட அநுரகுமார திசாநாயக்க, இலங்கை வாழ் அனைத்து மக்களையும் சம நோக்கோடு அணுகி இந்த நாட்டில் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை வலுவூட்டி செயல்பட சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவிப்பதாக அதன் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் இம்முறை கூடுதலான வாக்குகளை புதிய ஜனாதிபதிக்கு அளித்திருக்கிறார்கள். இந்த வெற்றியில் வட, கிழக்கு மக்களும் பங்கெடுத்தமை ஒரு பாராட்டத்தக்க விடயம். சகல மதங்களையும் சகல இனங்களையும் சுய கௌரவத்தோடு நடாத்தி கலை கலாசாரங்களை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு அனைத்து விதத்திலும் புதிய ஜனாதிபதி பங்களிப்பதுடன் தத்தம் இனங்களின் அடையாளங்களை அவர்கள் வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் என அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெள்ளியன்று இலக்கியக்களம்

“சங்கீத கலாபூஷணம்” ஹம்ஷானந்தி தர்மபாலன் தலைமையில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “இசையும் திறனாய்வும்'' என்னும் தலைப்பில் சமூக ஆய்வாளர் பூங்கோதை தங்கமயில் உரை நிகழ்த்தவுள்ளார்.

# ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு தேசிய ஷூரா சபை வாழ்த்து தெரிவிப்பு

National Shoora Council (NSC)

நாட்டில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு தேசிய ஷூரா சபை வாழ்த்து தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, நமது தேசத்தின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு தேசிய ஷூரா சபை தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

நாட்டு மக்களில் கணிசமான தொகையினர் நீங்கள் நாட்டை சிறப்பாக கட்டியெழுப்புவீர்கள் என்றட பெரும் எதிர்பார்ப்போடு, உங்களில் நம்பிக்கை வைத்து உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இந்த அதி உச்ச அதிகாரத்தை மக்களது நலன்களைக் கருத்திற் கொண்டு மட்டும் பயன்படுத்துவீர்கள் என்று நம்புகிறோம்.

மக்கள் பொருளாதார, சமூக, உளவியல் ரீதியாக மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கும் இக்கட்டான இந்த காலகட்டத்தில் மக்களது வாழ்வில் பெரும் மாற்றமொன்றைக் கொண்டு வருவீர்கள் என்று நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். திசைகாட்டி என்ற உங்களது தேர்தல் சின்னத்தைப் போன்றே நாடு சுபிட்சமான ஒளிமயமான திசையை நோக்கி பயணிக்கும் என்று நம்புகிறோம்.

சுயநல அரசியலை விட்டும் விலகி புதிய அரசியல் கலாசாரமொன்றை கட்டியெழுப்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

விலைவாசி உயர்வு, ஊழல், இலஞ்சம், பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம், குடும்ப ஆதிக்கம் போன்றன நாட்டை அதலபாதாளத்தில் தள்ளியிருக்கின்றன.

ஆகவே, இனவாதத்தை ஒழித்து நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கும், சட்டத்தை ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், சர்வதேசத்தில் எமது நாடு பற்றிய கீர்த்தியை கட்டி எழுப்புவதற்கும் உங்களது தலைமைத்துவத்தின் கீழ் உயர்ந்த பட்சம் முயற்சிப்பீர்கள் என்றும் நம்புகிறோம்.

இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக மக்கள் பின்பற்றி வரும் ஒழுக்க விழுமியங்கள், மத கலாசார தனித்துவங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கு உங்களது தலைமைத்துவம் உத்தரவாதம் தரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அண்மைக் காலத்தில் போதைவஸ்துப் பாவனை, குடும்ப நிறுவனங்களது சரிவு, சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவாட்சியின் பலவீனம், ஒழுக்க வீழ்ச்சி போன்றன மிகப் பெரும் சவால்களாக இருப்பதனால், அவற்றில் கவனம் செலுத்தி,சமூகத்தின் கட்டுக்கோப்பை பாதுகாக்கும் வகையில் உங்களது திட்டங்களை வகுப்பீர்கள் என்றும், ஆட்சி விவகாரங்களில் தூரநோக்கோடு ஆலோசனை வழங்குவதற்கு துறை சார் நிபுணர்களைக் கொண்ட ஆலோசனை சபையொன்றை நிறுவுவீர்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

பொதுவாக நாட்டோடும் குறிப்பாக இலங்கை முஸ்லிம்களோடும் தொடர்பான 27 முக்கிய அம்சங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை தேசிய ஷூரா சபை தயாரித்து தேர்தலுக்கு முன்னால் உங்களுக்கு கையளித்தது. அதில் உள்ள விடயங்களை நீங்கள் கவனத்தில் எடுப்பீர்கள் என்று நம்புகிறோம்.

இந்த நாட்டின் ஒருமைப்பாடு, இன ஐக்கியம், தேச நிர்மாணம் என்பவற்றுக்காக நீங்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு நாம் பக்கபலமாக இருப்போம் என்று உறுதியளிக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெலிகம ஆரம்ப முஸ்லிம் பாடசாலை தேசிய மட்டப்போட்டிகளுக்கு தகுதி




(வெலிகம தினகரன் நிருபர்)

அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாண மட்டப் போட்டிகள் கடந்த வாரம் காலி மழ்ஹருஸ் ஸுல்ஹிய்யா தேசிய பாடசாலையில், தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாஹிர் (நளீமி) தலைமையில் இடம்பெற்றது.

இதில் மாறை / வெலிகம ஆரம்ப முஸ்லிம் பாடசாலை கலந்து கொண்ட ஐந்து போட்டிகளிலும் முதலிடங்களை சுவீகரித்து சாதனை படைத்துள்ளது. இவர்கள் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.டி.எம். நாளிம் தெரிவித்தார்.

வெற்றியீட்டிய போட்டியாளர்கள் பிரிவு 1 இசையும் அசையும் : எம்.எஸ்.எப். ஸாரா, வாசிப்பு : எம்.ஆர். ஆயிஷா நூரா, பாவோதல்: எம்.எம்.எப். அஸ்மா, ஆக்கத்திறன் வெளிப்படு (கதை கூறல்): எம்.எப்.எப். அப்ரா, மற்றும் எழுத்தாக்கம் ஏ.என். உமைமா மர்யம் ஆகியோர்களாவர்.

# மூன்று தேசபந்து விருதுகள் பெற்று பேருவளைக்கு புகழ்

பேருவளை விசேட நிருபர்



சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, தேசிய கலை அரன் மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைப்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பு மூன்று லங்காபுத்ர தேசபந்து விருதுகளைப் பெற்றுக் கொண்டது.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ரத்னபிரிய பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பு நிர்வாகத்தின், பணிப்பாளர் ஸாபித் துல்பிகார் " மக்களின் முரசு லங்காபுத்ர தேசபந்து விருதும், செயலாளர் பாத்திமா ஹஸ்னத் கபீர் " மக்களின் முரசு லங்காபுத்ர தேசபந்து விருதும் மற்றும் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் நுஹா நிஸார் "கலைநிலா லங்கா புத்ர தேசபந்து" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து



இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாக சத்திய பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தனது நல்வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் இலங்கை வரலாற்றில் மிகவும் குறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு பலதசாப்த காலமாக பயணித்த முயற்சியின் பலனே இந்த வெற்றியாகும் என்றும் கட்சியின் தேசிய தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி சதீக்(முப்தி) தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர், இதனை தான் பாராட்டுவதாகவும் அத்துடன் நாட்டு மக்கள் ஒன்றிணைந்தது அரசியலில் ஒரு மாற்றம் தேவை, ஊழற்ற அரசாங்கம் உருவாக வேண்டும் அன்றாட உணவு பொருட்களின் விலைவாசி குறைக்கப்பட வேண்டும், நீதி நேர்மை இருக்க வேண்டும் மற்றும் சிறந்த திட்டங்களை வைத்து நாட்டை முன்னேற்றி செல்வர் என்ற நம்பிக்கையின் பிரகாரம் இந்த அழகிய இலங்கையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடம் ஒப்படைத்துள்ளார்கள்.

அத்துடன் அவர், சிறந்த முறையில் இனம் மதம் பாராது அனைத்து மக்களையும் சம உரிமையுடன் மதித்து இந்த நாட்டை ஆட்சி செய்வார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் நாட்டு மக்களின் நலனுக்காக எந்நேரமும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் இணைந்து பயணிக்க தான் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி பதவியேற்பை முன்னிட்டு புத்தளத்தில் மகிழ்ச்சி ஆரவாரம்






கற்பிட்டி தினகரன் விஷேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க நேற்று (23) காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையை கொண்டாடும் முகமாக முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொத்தாந்தீவு பிரதேசத்தில் நேற்று காலை 10.00 மணியளவில் தேசிய மக்கள் முன்னணியின் ஆதவாளர்கள் பாற்சோறு வழங்கப்பட்டு மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர்.

இதேவேளை, நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க அறிவிக்கப்பட்ட பின்னர், புத்தளத்திலும் (21) மாலை தூய தேசத்திற்கான இயக்கத்தின் தலைவர் இஷாம் மரிக்கார் தலைமையில் பொது மக்களுக்கு கேக் வழங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன் போது கட்சி பேதமின்றி அதிகளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.

# சமூக சேவையாளர் பாத்திமா சுபியானிக்கு தேசிய விருது

புத்தளம் தினகரன் நிருபர்



சிறந்த சமூக சேவகருக்கான "சமூகச் சுடர் லங்கா புத்ர தேசபந்து" தேசிய அங்கீகார விருதை புத்தளம் நகரின் சமூக சேவையாளர் பாறூக் பாத்திமா சுபியானி பெற்றுக் கொண்டார்.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் என்பன இணைந்து கண்ணகி கலாலயம், ஐக்கிய சுயதொழில் வியாபாரிகள் சங்கம் மற்றும் நாட்டின் சகல கலைஞர்களையும் ஒன்றிணைக்கும் தேசிய கலை அரண் ஏற்பாட்டில் மிக பிரமாண்டமாக இலங்கையிலுள்ள பல்துறை கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இதன் போதே புத்தளம் பாறூக் பாத்திமா சுபியானி இந்த விருதினை பெற்றுக்கொண்டார். இதில், பல்துறை கலைஞர்களுக்கு தேசிய அங்கீகாரம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்குச் சட்டவேளை திருடர்கள் கைவரிசை
## அநுராதபுரத்தில் சம்பவம்

திறப்பனை தினகரன் நிருபர்

கடந்த 21ஆம் திகதி நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திட்டமிட்ட கள்வர் கோஷ்டியொன்று அநுராதபுரம் நகரில் தமது கைவரிசையை காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


அநுராதபுரம் பிரதான நகர் பகுதியில் அமைந்துள்ள ஐந்து வர்த்தக நிலையங்கள் (21) நள்ளிரவுவேளையில் கள்வர்களால் உடைக்கப்பட்டு கடையில் உள்ள பணம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வியாபார நிலையங்களில் உள்ள ஊழியர்கள் வாக்களிப்பதற்காக விடுமுறையில் சென்றிருந்ததை பயன்படுத்தியும் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்ததை பயன்படுத்தியும் சன நடமாட்டம் இல்லாத போதே இச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இதுபற்றிய மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ஜிஃப்ரி ஹாசன் எழுதிய நூல் பிறமொழிகளிலும் வெளியீடு

## தமிழக அரசு நிதியுதவி



இலங்கைத் தமிழ் இலக்கிய எழுத்தாளர்களில் உலகளாவிய ரீதியில் அறியப்பட்ட எழுத்தாளராகவும் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் விளங்குபவர் ஜிஃப்ரி ஹாசன். வாழைச் சேனையைச் சேர்ந்த இவர், வாழைச்சேனை அந்நூர் தேசியப் பாடசாலையின் முன்னாள் மாணவராவார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் திறந்த பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்ற இவர், தற்போது ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். பாடசாலைக் காலம் முதல் 'பாலைநகர் ஜிஃப்ரி' எனும் பெயரில் எழுதத் தொடங்கிய இவர், பின்னர், ஜிஃப்ரி ஹாசன் எனும் பெயரில் சிறுகதை, கவிதை, விமர்சனம், ஆய்வு, மொழிபெயர்ப்பு என பல தளங்களில் இயங்கி வருகிறார்.

இவரது படைப்புகள் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து வெளிவருகின்ற அச்சு மற்றும் இணைய இலக்கிய இதழ்களிலும் தொடர்ந்து எழுதி வருகின்றார். இவ்வருட ஆரம்பத்தில் சென்னையில் தமிழக அரசினால் நடத்தப்பட்ட சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் தமிழ் நூல்களை உலக மொழிகளுக்குக் கொண்டு செல்லவும் உலக மொழிகளில் உள்ள நூல்களை தமிழுக்குக் கொண்டு வரவும் 'மொழிபெயர்ப்பு நல்கை' எனும் திட்டத்தின் வாயிலாக நிதி வழங்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக இலங்கை எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன் எழுதி, நன்னூல் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'அகாலத்தில் கரைந்த நிழல்' சிறுகதைத் தொகுதி தமிழ்நாடு அரசின் மொழிபெயர்ப்பு நல்கை உதவியோடு கிழக்கு ஆபிரிக்காவின் ஸ்வாஹிலி மொழியில் மொழிபெயர்ப்புச் செய்வதற்கான ஒப்பந்தம் நன்னூல் பதிப்பகத்திற்கும், Tanzania Educational Publishers Ltd நிறுவனத்திற்கும் இடையில் நடைபெற்றது.

அவ்வகையில், தமிழில் இருந்து ஸ்வாஹிலி மொழிக்குச் செல்லும் முதல் தமிழ் நூலாக இலங்கை எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசனின் 'அகாலத்தில் கரைந்த நிழல்' சிறுகதைத் தொகுப்பு தேர்வானது. அதன் முதல் கட்டமாக இந்நூலினை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கான பணிகளை தமிழ்நாடு நன்னூல் பதிப்பகம் மேற்கொண்டது.

டொக்டர் ர.விஜயப்ரியா தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். *UNTIMELY DISSOLVED SHADOW* ஏனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நூல் கடந்த 21ஆம் திகதி சிவகாசி SFR மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன் எழுதிய சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள சிறுகதைத் தொகுப்புகளிலும் சிங்கள இதழ்களிலும் வெளிவந்துள்ளன.



**எஸ்.ஏ.ஸ்ரீதர்...**
வாழைச்சேனை தினகரன் நிருபர்

# தீவிரவாத அமைப்புகளுக்கு ஆபத்தாக மாறிய பேஜர்கள், வோக்கிடோக்கிகள் பாவனை!

உலக நாடுகள் பன்னெடுங்காலமாக தீவிரவாதத்துக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஏவுகணைத் தாக்குதல், போர் விமானங்களின் மூலம் குண்டுமழை, சைபர் தாக்குதல் என வெவ்வேறு வடிவங்களிலான தாக்குதல்கள் நடந்து கொண்டு இருக்கின்றன.

ஆனால் இவற்றுக்கெல்லாம் வித்தியாசமாக அன்றாடம் பார்க்கும் பொருட்களை ஆயுதங்களாக்கி, அவற்றைப் பயன்படுத்திய ஒரு வியப்பான நிகழ்வை அண்மையில் உலகம் பார்த்தது. இந்நிகழ்வில் இலக்கு என்பது தீவிரவாதிகளுக்கே என்றாலும் பறிபோனது பொதுமக்களின் உயிர்களுமாகும்.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பயன்படுத்திய பேஜர்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின. இதில் ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் மட்டுமன்றி சாதாரண மக்களும் பலத்த காயமடைந்தனர். மறுநாள் இந்தப் பரபரப்பு அடங்கும் முன்னரே தீவிரவாதிகள் வசம் இருந்த வோக்கி டோக்கிகளும் வெடித்தன. இ தில் சில சோலார் தகடுகளும் உள்ளடங்குகின்றன. இதுவரை அத்தாக்குதல்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் சிகிச்சையில் உள்ளனர்.

இப்படி ஒரு தாக்குதலை தீவிரவாதிகள் மட்டுமின்றி உலக நாடுகளே கூட கணித்திருக்கவில்லை. ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான தனிநபர்களின் கருவிகளை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு வெடிக்கச் செய்த இந்தத் தாக்குதல் சர்வதேச மனித உரிமைகளுக்கு எதிரானது என்ற குரல்களும் எழுந்துகொண்டிருக்கின்றன. இந்தத் திட்டமிடப்பட்ட தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேலின் உளவு அமைப்பான 'மொசாட்' இருக்கலாம் என்று லெபனான் குற்றம்சாட்டியது.

இந்தத் தாக்குதலுக்கு முன்பே ஹிஸ்புல்லா அமைப்பினர் தங்களுடைய தொலைத்தொடர்புகளுக்கு செல்போன்களை பயன்படுத்துவதில்லை. அதற்கு மாற்றாக பேஜர்களையும், வோக்கி டோக்கிகளையுமே பயன் படுத்தி வந்தனர். செல்போன்களின் வருகைக்கு முன்பு 90களிலேயே பேஜர்களின் பயன்பாடு வழ க்கொழிந்து போய்விட்டது.

எனினும், தங்களின் தொலைத்தொடர்பு க்காக ஹிஸ்புல்லா அமைப்பு கடந்த ஆண்டு பேஜர்களை ஓர்டர் செய்து வாங்கியுள்ளது. அதாவது, செல்போன்களை போல எளிதில் ட்ரக் செய்ய முடியாத பேஜர் மற்றும் வோக்கி டோக்கிகள் மூலம் இஸ்ரேலின் கண்ணில் மண்ணை தூவலாம் என்பது ஹிஸ்புல்லா அமைப்பின் எண்ணமாகும்.

ஏற்கெனவே நாம் பயன்படுத்தும் ஸ்மார்ட்போன்கள் மூலம் நாம் கண்காணிக்கப்படுகிறோமா, நம்முடைய தனிப்பட்ட தகவல்கள் திருடப்படுகின்றனவா என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் இருந்துகொண்டிருக்கும் வேளையில், தற்போது நாம் அன்றாடம் பயன்படுத்தும் கருவிகளை ஆயுதமாக்கி தாக்குதல் நிகழ்த்தவும் முடியும் என்ற புதிய அச்சம் மக்கள் மனதில் எழுந்துள்ளது.

இன்னொரு பக்கம், ஸ்மார்ட் போன்களின்வருகைக்குப்பிறகுகுற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதும், சிக்கலான கிரிமினல் வழக்குகளை தீர்ப்பதும் சுலபமாகி விட்டது. உதாரணமாக, செல்போன்களை ட்ரக் செய்வதன் மூலம் காணாமல் போன நபர்களை கண்டுபிடிப்பது, கொலைக் குற்றவாளிகளை சுலபமாக கண்டறிவது, தீவிரவாதிகளை ட்ரக் செய்வது உள்ளிட்டவை அரசு அமைப்புகளின் வேலையை முன்பை காட்டிலும் எளிமையாக்கி உள்ளன. அதேபோல தனிப்பட்ட நபர்களுக்கு இது சாதகமான பல விஷயங்களை தருகிறது. உதாரணமாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கண்காணிக்கவும், கார் உள்ளிட்ட வாகனங்களை ட்ரக் செய்யவும், பத்திரிகையாளர்களுக்கும் இது பெருமளவில் உதவுகிறது. இந்த ட்ரக்கிங் வசதிகள், ஜி.பி.எஸ், வைஃபை, செய்மதி வழியாக சாத்தியமாகின்றன.





செல்போன்களைப் போல பேஜர்களை ட்ரக் செய்வது சுலபம் அல்ல. தகவல்களைப் பகிர மட்டுமே பயன்படுத்தப்படும் பேஜர், பயனரின் தகவல்களை ட்ரக் செய்யும் வசதிகளை கொண்டிருப்பதில்லை.

இதனால் ஹிஸ்புல்லா அமைப்பினர் செல்போன்களை விடுத்து பேஜர்களை நாடிச் சென்றனர். இப்படியான சூழலில்தான் அந்த பேஜர்களை வசப்படுத்த அதன் விநியோக சங்கிலியில் கைவைத்துள்ளது இஸ்ரேல்.

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் பேஜர் தயாரிப்புக்காக 3 போலி நிறுவனங்களை தொடங்கியது இஸ்ரேல் உளவுத்துறை. அதில் 'பி.ஏ. சி கன்சல்டிங்' என்ற ஒரு நிறுவனம் தாய்வான் நாட்டின் கோல்ட் அப்பலோ நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து பேஜர்களை தயாரித்து வந்தது. இந்த பேஜர்களின் உட்பகுதியில் 3 கிராம் எடையுள்ள வெடிபொருட்கள் மறைத்து வைக்கப்பட்டன.

இந்த நிறுவனத்திடம் இருந்து தான் ஹிஸ்புல்லா அமைப்பு 5,000 பேஜர்களை வாங்கியது. ஏற்கனவே திட்டமிட்டபடி, உரிய நேரம் பார்த்து அந்த பேஜர்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்து மொசாட் தாக்குதல் நடத்தியதாக உறுதியான தகவல்கள் கூறுகின்றன.

லெபனான் சம்பவத்தின் எதிரொலியாக, ஒவ்வொரு நாட்டின் இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளும் கூட விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது தெளிவாகிறது.

இந்தப் புதுரக தாக்குதலுக்கு இலக்கு ஆகாமல் கவனித்துக் கொள்ள தங்கள் வசமுள்ள தொலைத்தொடர்பு சாதனங்களை ஆராய்வது அத்தியாவசம் ஆகியுள்ளது.

ஹிஸ்புல்லா போன்ற தீவிரவாத அமைப்புகள் ஸ்மார்ட்போன்களை தவிர்க்கும் முடிவில் நமக்கும் சில பாடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. நாம் எந்த நேரத்திலும் எந்த வழியிலும் கண்காணிக்கப்படலாம் என்று நினைவூட்டலே இது போன்ற நிகழ்வுகள்.

இன்னொரு பக்கம், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் ஒரு கருவி அவர்களிடம் வந்து சேரும் முன்னரே, அதை யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் மாற்றி அவர்களுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என்பதை இஸ்ரேலின் இந்த பேஜர், வோக்கிடோக்கி தாக்குதல் சம்பவங்கள் பறைசாற்றுகின்றன.

# ஜனாதிபதியின் பதவியேற்பையொட்டி மட்டு. மாவட்டத்தில் பல்வேறு வைபவங்கள்







**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று பதவிப் பிரமாணம் செய்த வைபவத்தை யொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு சமய தலைவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்று குழு ஏற்பாடு செய்த தாக சாந்தி குளிர்பானம் வழங்கும் வைபவம் மட்டக்களப்பு நாவற்குடா பிரதான வீதி தேசிய மக்கள் சக்தி அலுவலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் மாவட்ட நிறைவேற்று செயற்குழு உறுப்பினர் என். சுசாகரன் உட்பட தேசிய மக்கள் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்


மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் பெரும் வரட்சியினால் மக்கள் அவதிப்படுகின்ற சூழ்நிலையில் வீதியால் பயணிக்கும் பயணிகளுக்கு தேசிய மக்கள் சக்தியினர் குளிர்பானம் வழங்கியவை குறிப்பிடத்தக்கது. பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



மாவனல்லை IDEAL நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் ரமழானில் ஏற்பாடு செய்யப்பட்ட "அல்குர்ஆனை இதயத்தில் சுமப்போம்" என்ற தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் சிறுவர்களுக்காக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அதன் தலைவி சனா ஹனீபா தலைமையில் அண்மையில் ராழியா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இலங்கை விமானப்படை பாதுகாப்பு அதிகாரியான எயார் மாஷல் எம். எச். எம். சிபா ஹனீபா பிரதம அதிதியாகவும் விசேட அதிதிகளாக அம்ஹர் நளீமி, ரஸ்மி நளீமி, மௌலவியா நுஸைஹா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

# சாய்ந்தமருது பள்ளிவாசலில் ஜனாதிபதிக்கு துஆ பிரார்த்தனை



**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மேன்மைதங்கிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இவரது ஆட்சியின் கீழ் நாட்டில் இன ஐக்கியம், சுபீட்சம் ஏற்பட்டு வளமான நாடு உருவாக வேண்டி ஏற்பாடு செய்த விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு நேற்று (23) மாலை சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ. ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விசேட துஆ பிராத்தனையை பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் எம்.ஐ. ஆதம்பாவா (றஸாதி) நிகழ்த்தினார். இதில் அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், பிரதேச பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# புதிய ஜனாதிபதிக்கு ஆடை சங்கங்களின் மன்றம் வாழ்த்து

இலங்கையின் முன்னணி ஜவுளி மற்றும் ஆடைத் தொழிற்துறை அமைப்பான ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திசாநாயக்கவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

நாடு தலைமைத்துவத்தின் ஒரு புதிய கட்டத்திற்குள் பிரவேசிக்கும் போது, இலங்கையின் ஏற்றுமதி தலைமையிலான வளர்ச்சியின் முக்கிய உந்துதலாகவும், நாட்டின் பொருளாதார போட்டித்தன்மையின் முக்கிய அங்கமாகவும் உள்ள துறையின் மகத்தான முக்கியத்துவத்தை JAAF எடுத்துக்காட்டுகிறது. இலங்கை மக்கள் வழங்கிய ஆணையில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்க மற்றும் அவரது குழுவினருடன் இணைந்து பணியாற்றுவதாக JAAF உறுதிபூண்டுள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியின் தூரநோக்கு பார்வையானது, ஊழலை ஒழிப்பதற்கும், பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் வலுவான கவனம் செலுத்தி, நியாயமான, நீதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்குவதை மையமாகக் கொண்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, நல்லாட்சி மற்றும் நிலையான பொருளாதார மேம்பாட்டிற்கான அவரது அர்ப்பணிப்பு, நெறிமுறை நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் ஆடைத் துறையில் நீண்ட கால வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகிய ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) இலக்குகளுடன் ஒத்துப்போகிறது.



இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 40% க்கும் அதிகமாக பங்களிக்கும், ஜவுளி மற்றும் ஆடைத் தொழில் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பிடத்தக்க ஏற்றுமதி வருவாய் ஈட்டியதோடு, இந்தத் துறை சுமார் ஒரு மில்லியன் இலங்கையர்களுக்கு தனது ஒத்துழைப்புகளை வழங்கி, வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், நாடு முழுவதும் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது. இந்தத் தொழிற்துறையின் தாக்கம் அதன் நேரடி பொருளாதார பங்களிப்புகளையும் தாண்டி வெகு தொலைவில் நீண்டுள்ளது. இது சமூகங்களை மேம்படுத்துவதிலும் நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய சக்தியாகவுள்ளது.

"புதிய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் நெருக்கமாக இணைந்து, ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதித் துறைகளின் தொடர்ச்சியான வெற்றியை உறுதி செய்வதை எதிர்பார்க்கிறோம்," என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றத்தின் (JAAF) செயலாளர் நாயகம் யொஹான் லோரன்ஸ் கூறினார்.

# கேள்வி அறிவித்தல் – 2025

## புத்தளம் நகர சபை

2025ம் ஆண்டுக்கு புத்தளம் நகர சபையின் இறைச்சிக் கடை 18 மற்றும் கொழும்பு முகத்திடல் வியாபார ஸ்தளம் (Beach Stall) 06 உட்பட சொத்துக்களின் வியாபார உரிமைகளை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகர சபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புத்தளம் நகர சபையின் அறிவித்தல் பலகையிலும், நகரத்தில் உள்ள அரச அலுவலக அறிவித்தல் பலகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள் என்பவற்றை உரியகொடுப்பனவுகளை செலுத்தி 2024.09.24ம் திகதி மு.ப 8.30 முதல் 2024.10.21ம் திகதி பி.ப 3.00 வரை புத்தளம் நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி கட்டுப்பாடுகளுக்கமைவாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2024.10.22ம் திகதி மு.ப 10.00க்கு முன்னர் "கேள்விப் படிவம் 2025ம் ஆண்டிற்கான நகர சபையின் சொத்துக்களை குத்தகைக்கு விடல்" செயலாளர், நகர சபை, புத்தளம் என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விகளை நகர சபை காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடவோ முடியும்.

கேள்விகள் யாவும் 2024.10.22ம் திகதி மு.ப 10.10க்கு திறக்கப்படும். கேள்விகள் தொடர்பாக கேள்விச் சபையால் மேற்கொள்ளும் தீர்மானம் இறுதியானதாகும்.

**எல்.பீ.ஜீ. ப்ரீதிகா,**
**செயலாளர்,**
**நகர சபை புத்தளம்**
**2024.09.19**

**2025ம் ஆண்டிற்கான புத்தளம் நகர சபையினால் வழங்கப்படுகின்ற சொத்துக்களின் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகர சபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.**

| இல. | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்வி பிணை முறி (ரூபா) மீளளிக்கப்படும் | படிவக் கட்டணம் (ரூபா) மீளளிக்கப் படாதது | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுச்சந்தை 02 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 968,121.00 | 48,406.05 | 10,000.00 | 1 |
| 2 | பொதுச்சந்தை 02 மாட்டிறைச்சிக்கடை இல. 02 | 968,121.00 | 48,406.05 | 10,000.00 | 1 |
| 3 | வட்டார இல. 01 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 4 | வட்டார இல. 03 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 5 | வட்டார இல. 03 மாட்டிறைச்சிக்கடை இல. 02 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 6 | வட்டார இல. 03 மாட்டிறைச்சிக்கடை இல. 03 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 7 | வட்டார இல. 04 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 8 | வட்டார இல. 04 மாட்டிறைச்சிக்கடை இல. 02 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 9 | வட்டார இல. 06 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 10 | வட்டார இல. 07 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 11 | வட்டார இல. 10 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 707,668.50 | 35,383.43 | 10,000.00 | 1 |
| 12 | வட்டார இல. 11 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 860,128.50 | 43,006.43 | 10,000.00 | 1 |
| 13 | பொதுச்சந்தை 02 கோழியிறைச்சிக்கடை இல. 01 | 343,035.00 | 27,442.80 | 10,000.00 | 1 |
| 14 | பொதுச்சந்தை 02 கோழியிறைச்சிக்கடை இல. 02 | 343,035.00 | 27,442.80 | 10,000.00 | 1 |
| 15 | பொதுச்சந்தை 02 கோழியிறைச்சிக்கடை இல. 03 | 343,035.00 | 27,442.80 | 10,000.00 | 1 |
| 16 | பொதுச்சந்தை 02 கோழியிறைச்சிக்கடை இல. 04 | 343,035.00 | 27,442.80 | 10,000.00 | 1 |
| 17 | பொதுச்சந்தை 02 ஆட்டிறைச்சிக்கடை இல. 01 | 396,396.00 | 31,711.68 | 10,000.00 | 1 |
| 18 | பொதுச்சந்தை 02 ஆட்டிறைச்சிக்கடை இல. 02 | 396,396.00 | 31,711.68 | 10,000.00 | 1 |
| 19 | பீ்.ப் ஸ்டோல் இல. 01 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |
| 20 | பீ்.ப் ஸ்டோல் இல. 02 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |
| 21 | பீ்.ப் ஸ்டோல் இல. 03 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |
| 22 | பீ்.ப் ஸ்டோல் இல. 04 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |
| 23 | பீ்.ப் ஸ்டோல் இல. 05 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |
| 24 | பீ்.ப் ஸ்டோல் இல. 06 | 270,000.00 | 21,600.00 | 5,000.00 | 1 |

**எல்.பீ.ஜீ.ப்ரீதிகா,**
**செயலாளர்,**
**புத்தளம் நகர சபை,**
**032 - 2265275**


OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want | වරම | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Kurunegala District

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343


சுகாதார அமைச்சு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## கேள்வி திருத்தம் பற்றிய அறிவித்தல்

## மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான கேள்வி

2024-09-09ஆம் திகதி இந்தப் பத்திரிகையில் பிரசுரமான மேற்கூறிய கேள்வி அறிவித்தலைக் குறிக்கின்றது. (Q 549/24, Q 586/24)

பின்வருமாறு சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல் மற்றும் திறக்கப்படுதல் என்பன 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 2025-01-10ஆம் திகதி வரையாகும்.

விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2025-02-10ஆம் திகதி வரையாகும்.

கூறப்பட்ட விளம்பரத்தில் தரப்பட்டுள்ள ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



பொது வைத்தியசாலை - ஸ்ரீ ஜயவர்தனபுர

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல. Q – 604/24**

## நீர் குளிர்மைப்படுத்தும் சாதனம் (200T) (Water - Cooled Chiller) ஒன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கேள்வி

பின்வருமாறு விபரிக்கப்படும் ''ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் நீர் குளிர்மைப்படுத்தும் சாதனம் (200T) (Water - Cooled Chiller) ஒன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கேள்வி'' என்பவற்றுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

01. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்காக தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் இதனையொத்த வேலையை கடந்த 05 வருடத்தினுள் மேற்கொண்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0112778610 – நீடிப்பு 3142 / 0112778624 மற்றும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. விலைகளைக் கோரும்போது மதிப்பீட்டு விலைக்கோரல் தொகை 5,000,000.00 ரூபாவிற்கு அதிகமானால் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் மற்றும் நிகழ்நிலை விண்ணப்பங்களுக்கு eroc.drc.gov.lk எனும் இணையத்தில் பதிவு செய்யவும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-09-24ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவைச் செலுத்தி மற்றும் நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அதிகாரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. விலைமனுக்களை 2024-10-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொட எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைவரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

07. விலைக்கோரல் பிணை முறித் தொகை 360,000.00 ரூபாவாகும்.

08. வேலைத் தள பரிசீலனை மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கூட்ட அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை - ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**







it's what you want www.adz.lk




* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

KP-8153 PERODUA 2011, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0714542 958/ 0711210810. 064575

PU-4663 MAHINDRA MAXIMO 2004, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0714542 958/ 0711210810. 064572

### 117 வேன்கள் விற்பனைக்கு

WP PG-9058 SUZUKI EVERY VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 064683

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP DAD-0121 DFSK UNIMO F/ B TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 064685

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BGY-0802 BAJAJ PULSAR 200 NS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 064686

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **08/10/2024**

இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **09/10/2024**

இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.502/2, குமாரகே கட்டிடம், அவிசாவளைவீதி, கடுவெல.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **10/10/2024**

இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.235, புதிய காலி வீதி, அம்பலாங்கொட.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.110, 112, பிரதான வீதி, கல்முனை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.




## இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு - 10

### மின்சார சலவையகத்தை பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகளுக்கான பெறுகை அறிவித்தல்

2024/2025ஆம் வருடங்களில் கொழும்பு இலங்கை தேசிய வைத்தியசாலையின் மின்சார சலவையகத்தைப் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகளுக்காக இயைபுடைய துறையில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களைக் கொண்ட அரசாங்கத்தில் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத 1500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-09-24ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரைக்கிடையில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இயைபுடைய விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2024-10-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்தியர் டபிள்யூ. கே. விக்கிரமசிங்க,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**




## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/09/15 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/10/15 மற்றும் 2024/10/16 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## கட்டிடங்கள் திணைக்களம்

### கேள்விகளுக்கான அழைப்பு

### அநுராதபுரம் நாட்டுப்புற அருங்காட்சியகத்தில் (Folk Museum) நிலச்சீராக்க வேலைகள் மற்றும் Chain Link வேலியின் திருத்தவேலைகள்

**(ஒப்பந்த இல. BD-0010sp02-Z3/RCT02/24)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 5.4 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவுடையதுமான அநுராதபுரம் நாட்டுப்புற அருங்காட்சியகத்தில் (Folk Museum) நிலச்சீராக்க வேலைகள் மற்றும் Chain Link வேலியின் திருத்தவேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் (வலயம் 3) பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 63 நாட்கள்.

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iv) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக C7 அல்லது C6 தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   ''பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை *(Original Certificate of PCA 03)* கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். *PCA 03* பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது''

4. குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 037-2222437, தொலைமடல்: 037-2222197

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500.00) 2024-09-24ஆம் திகதி முதல் 2024-10-08ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 3), பிரதான பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 3), கட்டிடத் திணைக்களம், வில்கொட வீதி, குருநாகல் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இதே முகவரியில் வருகை தந்துள்ள கேள்வி கோரலில் கலந்துகொள்ள கேள்விதாரர்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்,
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 80,000.00 ரூபா தொகைக்கு
   * 2025 ஜனவரி 21ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.0ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 3),**
**பிரதான பொறியியலாளர் அலுவலகம் (வலயம் 3),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**வில்கொட வீதி, குருநாகல்.**

2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**கம்பனியின் பழைய பெயர் :** மெரிடியன்ஸ் கொலேஜ் ஓ.்.ப் ஹய(ர்) எடியுகேஷன் (பீவீடீ) எல்டீடி
**கம்பனி இலக்கம் :** பிவி 00300584
**பதிவு அலுவலகம் :** இல. 593/ ஏ2,ஏ3, கண்டி வீதி, எல்தெனிய, கடவத்த
**கம்பனியின் புதிய பெயர் :** மெரிடியன்ஸ் கெம்பஸ் ஓ.்.ப் ஹய(ர்) எடியுகேஷன் (பீவீடீ) எல்டீடி.
**கம்பனியின் பெயர் மாற்றப்பட்ட திகதி :** 11.07.2024
வோட்டர்ஸ் செகடேரியல் சேர்விசஸ் (பீவீடீ) எலிடீடி




E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 / 011 2 429 342/ 343

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல் (IFB)

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் கட்டுமான நடவடிக்கைகளுக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானத்திற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   **I. RDA/GAM/CE/TEN/2024/37** - உடுப்பில சந்தியில் இடைநிலை (Center Median) மற்றும் போக்குவரத்து சாலை திட்டு (Traffic island) நிர்மாணம்

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

### விலைமனுக்கோரல்

### விலைக்கேள்வி இலக்கம் : 117/T/2024

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் பதவியணியினருக்கு அலுவலக போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்

### மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் – மத்தளை "D" தொகுதி (ஒரு வருட காலத்திற்காக 2024 / 2025)

1. மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின், (ம.இ.ச.வி) வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பதவியணியினருக்கு அலுவலக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பின்வரும் "D" தொகுதி பாதைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன. ஒப்பந்தம் செய்துகொண்ட காலப்பகுதிக்குள் விலைக்கூறுநரால், வழங்குகின்ற பேருந்துகளின், வாகன பதிவு செய்யும் சான்றிதழ்களில் விலைக்கூறுநர் தற்போதைய உரிமையாளராக அல்லது வழங்கப்படுகின்ற பேருந்துகள் விலைக்கூறுநரின் பேரில் மற்றும் குத்தகை கம்பனியொன்றின் பேரில் சார்பிலா உரிமையாளராக நிதிசார் குத்தகை பெற்றிருப்பது அவசியமானதாகும்.

| பாதை இலக்கம் | "D" தொகுதி | | | ஒரு பயணத்தட வைக்குள்ள தூர அளவு கி.மீ | ஆகக்குறைந்த ஆசனங்களின் எண்ணிக்கை (மேலதிக ஆசனங்களைத் தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|
| | ஆரம்பிக்கும் இடம் | | சேரிடம் | | |
| D-1 | யோதகண்டிய (வேலை முறையேடு) | - | (ம.இ.ச.வி) - மத்தளை | 49 | 58 |
| D-2 | எம்பிலிப்பிட்டிய (வேலை முறையேடு) | - | (ம.இ.ச.வி) - மத்தளை | 50 | 58 |
| D-3 | ஹம்பாந்தோட்டை (வேலை முறையேடு) | - | (ம.இ.ச.வி) - மத்தளை | 30 | 58 |

2. மேற்குறிப்பிட்ட "D" தொகுதியின் கீழ் காட்டப்பட்டுள்ள அனைத்து பேருந்துகள் பாதைகளுக்காக விலைக்கூறுநரால் விலைக்குறிப்பீடுகளை முன்வைத்தல் வேண்டும்.

3. விலைக்கேள்வி ஆவணங்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவினால் 2024 செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை வாராந்தம் வேலை செய்யும் நாட்களில் வெளியிடப்படுவதுடன் ஒரு இணைக்கோப்புக்காக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 9,000.00 ஆன (ரூபா ஒன்பதாயிரம் மாத்திரம்) கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

4. இந்த விலைக்கேள்வி அழைப்பு தொடர்பாக ஆரம்ப சுருக்கமான முறையில் தெளிவுபடுத்தும் கூட்டம் 2024 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தலைவர் மனித வளங்கள், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, புதிய நிர்வாகக் கட்டிடம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற இடத்தில் இடம்பெறும்.

5. அனைத்து விலைக்கேள்விகளுக்காக திருப்பி செலுத்தப்படுகின்ற ரூபா 720,000/- (ரூபா ஏழு இலட்சத்து இருபதாயிரம் மாத்திரம் ) விலைக்கேள்வி பிணைமுறி சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அக்குறித்த விலைக்கேள்வி பிணைமுறி வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் நிதிப் பிரிவிற்கு செலுத்திய பற்றுச்சீட்டு வடிவத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகாரம் பெற்ற, வணிக / விஷேட வங்கியொன்றின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி பிணைமுறி வடிவத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனைத்து விலைக்கேள்வி பிணைமுறிகள், விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியிலிருந்து அடுத்துவரும் 120 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

6. கம்பனியின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி அழைப்பு இணைப்பு கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கு இயைவாக பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி அழைப்பு இணைக்கோவை மற்றும் அதன் பூர்த்தி செய்யப்பட்ட பிரதி வெவ்வேறாக கடித உறைகளிலிட்டு முத்திரை குறியிடப்பட்டு உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு முறையே குறிப்பிடுதல் வேண்டும்:

   **"விலைக்கேள்வி ஆவணங்களின் மூலப்படிவம் - "அலுவலக போக்குவரத்துச் சேவை வசதிகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்- "D" தொகுதி- 2024/2025 (ஒரு வருட காலத்திற்காக)"**

   "விலைக்கேள்வி அழைப்பு படிவத்தின் பிரதி - "அலுவலக போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்- **"D" தொகுதி - 2024/2025 (ஒரு வருட காலத்திற்காக)"**

   இவ்வாறு முத்திரை குறியிடப்பட்ட இவ்விரு கடித உறைகளும் ஒரு உறையிலிட்டு அதனையும் பாதுகாப்பான முறையில் முத்திரை குறியிடப்பட்டு "விலைக்கேள்வி அழைப்பு மூலப்படிவம் அலுவலக போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்- "D" தொகுதி - 2024 /2025 (ஒரு வருட காலத்திற்காக) ஆக மற்றும் விலைக்கேள்வி இலக்கத்தையும் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புவதாயின் "தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் -02, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற இடத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை குழு இலக்கம் - 02 இற்குரிய ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 2024 ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் வைப்பீடு செய்தல் வேண்டும்.

7. முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை பொறுப்பேற்றல் 2024 ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவு செய்யப்பட்டவுடன் உடனடியாக விலைக்கேள்விகளைத் திறத்தல் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க" என்ற இடத்தில் இடம்பெறும். விலைக்கேள்விகளை திறக்கும் வேளையில் விலைக்கூறுநருக்கு அல்லது அவரின் அனுமதிபெற்ற பிரதிநிதிக்கு பங்குகொள்ள முடியும்.

8. இந்த விலைக்கேள்வி அழைப்புடன் தொடர்பான மேற்படி தகவல்கள் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தலைவர்- மனிதவள அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0112251837 மூலம் அல்லது 0112263513 மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள், (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

The Housewives' companion
Classifieds on
Daily News




# ஜயசூரியவின் ஐந்து விக்கெட்டுகள் மூலம் முதல் டெஸ்டில் இலங்கை அணி வெற்றி

## உலக டெஸ்ட் சம்பியன்சிப்பிலும் அதிரடி முன்னேற்றம்

பிரபாத் ஜயசூரிய வீழ்த்திய ஐந்து விக்கெட்டுகளின் உதவியோடு நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 63 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இலங்கை அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடரில் 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் 275 ஓட்ட வெற்றி இலக்குடன் நேற்று (23) கடைசி நாளில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து நியூசிலாந்து அணி 15 நிமிடங்களுக்குள்ளேயே எஞ்சிய இரு விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை சந்தித்தது.




குறிப்பாக இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு 2 ஓட்டங்களும் நியூசிலாந்தின் வெற்றிக்கு 64 ஓட்டங்களைப் நேற்று பெற வேண்டி இருந்தது. எனினும் காலை போட்டி ஆரம்பித்து நான்கு ஓவர்களுக்குள் ஆட்டத்தை தமக்கு சார்பாக நிறைவு செய்ய இலங்கையால் முடிந்தது.

இதன்படி நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 71.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களையே பெற்றது. நியூசிலாந்து அணிக்காக கடைசி வரை போராடிய ரச்சின் ரவிந்திரா 92 ஓட்டங்களுக்கு பிரபாத் ஜயசூரியவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் ரவிந்திரா பெற்ற ஓட்டம் நியூசிலாந்து வீரர் ஒருவர் இந்த மைதானத்தில் பெற்ற அதிக ஓட்டங்களாக இருந்தன. 2019 இல் ரொஸ் டெய்லர் பெற்ற 89 ஓட்டங்களையே அவர் முறியடித்தார்.

சிறப்பாக பந்து வீசிய பிரபாத் ஜயசூரிய 30.4 ஓவர்களில் 68 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். அவர் முதல் இன்னிங்ஸில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில் இந்த டெஸ்ட்டில் அவர் மொத்தம் 9 விக்கெட்டுகளை பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

'காலியில் ஆடும்போது, போட்டிக்கான அடிப்படையைப் பின்பற்ற வேண்டும். நேர்த்தியுடன் பந்தை வீசினால் விக்கெட்டுகளை வீழ்த்த பெரும் உதவியாக இருக்கும். தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்துவது முக்கியம் என்பதோடு மற்ற சுழற்பந்து வீச்சாளர்களிடம் இருந்து பெரும் உதவி கிடைத்தது' என்று போட்டிக்குப் பின்னர் ஜயசூரிய குறிப்பிட்டார்.

பிரபாத் ஜயசூரிய காலியில் ஆடிய ஏழு டெஸ்ட் போட்டிகளில் இன்னிங்ஸ் ஒன்றில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்துவது இது எட்டாவது தடவையாகும்.

இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 305 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 340 ஓட்டங்களை குவித்தது. இந்நிலையில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 309 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் நியூசிலாந்துக்கு சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க முடிந்தது.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளைப் பின்தள்ளி மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அவுஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும் காணப்படுகின்றன. இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை (26) இதே காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# ஹிஸ்புல்லா இலக்குகளிலிருந்து விலகியிருக்க லெபனான் மக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

## உக்கிர தாக்குதல்களில் லெபனானில் 50 பேர் பலி

அமைதி காப்பதற்கான சர்வதேச அழைப்புக்கு மத்தியிலும் இஸ்ரேலிய இராணுவம் நேற்று (23) தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் கடுமையான தாக்குதல்களை நடத்தியதோடு தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தப்போவதாகவும் குறிப்பிட்டது. அதேபோன்று ஹிஸ்புல்லா நிலைகளில் இருந்து விலகி இருக்கும்படி லெபனான் மக்களையும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

லெபனானில் நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டு 300க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறுபுறும் இராணுவ ரீதியில் அனைத்தையும் எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் தெற்கு லெபனானில் உள்ள மக்களுக்கு நேற்று லெபனான் நாட்டு இலக்கம் ஒன்றில் இருந்து விடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்பில், ஹிஸ்புல்லா பயன்படுத்தும் எந்த ஒரு நிலையில் இருந்தும் விலகி இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

லெபனானில் உள்ள மக்களுக்கு இது போன்ற எச்சரிக்கை ஒன்று விடுக்கப்படுவது இது முதல் முறை என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகரி குறிப்பிட்டார். லெபனான் முழுவதும் பரவலாக உள்ள பயங்கரவாத இலக்குகளுக்கு எதிரான விரிவான மற்றும் துல்லியமான தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் ஹகரி குறிப்பிட்டார்.

காசாவில் நீடிக்கும் போரை ஒட்டி சுமார் கடந்த ஓர் ஆண்டாக இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையில் எல்லையில் பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் அண்மைய நாட்களில் மோதல் உக்கிரம் அடைந்துள்ளது.

காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் மற்றும் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவே இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நடத்தி வருவதாக ஹிஸ்புல்லா அமைப்பு குறிப்பிடுகிறது.

லெபனான் மற்றொரு காசாவாக மாறும் அச்சுறுத்தல் இருப்பதாக வருடாந்த பொதுக் குழுக் கூட்டத்தையொட்டி ஐக்கிய நாடுகள் சபை தலைவர் அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்துள்ளார். காசா போரில் இரு தரப்பும் போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஆர்வம் காட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் அவர் குறிப்பட்டார்.

'எதிரிப் போர் விமானங்கள் அரை மணி நேரத்தில் 80க்கும் அதிகமான வான் தாக்குதல்களை நடத்தியது' என்று லெபனானின் உத்தியோகபூர் செய்தி நிறுவனம் நேற்று கூறியது. இதன்போது தெற்கு லெபனான் பகுதி இலக்கு வைக்கப்பட்டதாகவும் கிழக்கே பக்கா பள்ளத்தாக்கிலும் தாக்குதல்கள் உக்கிரமாக இருந்ததாகவும் இதில் மேய்ப்பாளர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

முன்னதாக கடந்த ஞாயிறன்று லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டன. இதனை அடுத்து பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'ஹிஸ்புல்லா மீது அது நினைத்துப் பார்க்க முடியாத தொடர்ச்சியான அடிகளை மேற்கொள்ளும்' என்று எச்சரித்தார்.

இந்நிலையில் ஹிஸ்புல்லா பிரதித் தலைவர் நசிம் கஸ்ஸம், தமது அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக 'புதிய கட்ட' மோதல் ஒன்றில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேலின் வடக்குக் கடற்கரையில் உள்ள பிரதான நகரான ஹைபாவில் இடம்பெற்ற தாக்குதலால் பொருட் சேதம் ஏற்பட்டு இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்பட்ட நிலையிலேயே இரு தரப்பினரும் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

'தமது பிரஜைகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் எந்த நாடும் அமைதி காக்க முடியாது' என்று குறிப்பிட்ட நெதன்யாகு, காசாவில் இருந்து ஹிஸ்புல்லா மீது இஸ்ரேல் தனது அவதானத்தை திருப்பி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போர், ஹிஸ்புல்லா உட்பட பிராந்தியத்தில் உள்ள ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் இஸ்ரேலுடன் மோதலில் ஈடுபடுவதற்கு தூண்டியதோடு அது பிராந்தியப் போராக வெடிக்கும் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது.

வடக்கு இஸ்ரேலில் உள்ள இஸ்ரேலிய சமூகத்தினர் பாதுகாப்பாக தமது வீடுகளுக்கு திரும்பும் இலக்கை எட்டும் வரை இராணுவ நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் கடந்த ஞாயிறன்று (22) கூறியிருந்தார்.

எனினும் மோதலை விரிவுபடுத்துவதில் இஸ்ரேல் முக்கியமாக ஆர்வம் காட்டவில்லை என்று இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடும் அதற்கு பிரதான ஆயுதங்களை வழங்கும் நடாகவும் இருக்கும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. பரந்த அளவான போர் ஒன்று வெடிப்பதை தவிர்ப்பதற்கு எம்மால் முடியுமான அனைத்தையும் எமது நிர்வாகம் செய்து வருகிறது. என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் ஒன்று ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் வலியுறுத்தி இருப்பதோடு வடக்கு எல்லையில் கடுமையான பத்தற் நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டு இஸ்ரேலில் இருந்து தமது பிரஜைகளை வெளியேறும்படி சீனா வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேலின் சிக்கலான வான் பாதுகாப்பு அமைப்புக்கு மத்தியிலும், ஹிஸ்புல்லா ரொக்கெட் குண்டுகள் ஹைபாவுக்கு அருகில் உள்ள கிரியாட் பியாலிக் பகுதியில் விழுந்து கட்டடம் ஒன்று தீப்பற்றியதோடு வாகனங்களும் தீயில் கறுகின.

'இது இனிமையான விடயம் அல்ல. இது ஒரு போர்' என்று இஸ்ரேலிய குடியிருப்பாளர் ஒருவரான ஷரோன் ஹக்மிஷ்விலி குறிப்பிட்டுள்ளார். எனினும் இஸ்ரேலுடனான மோதலில் ஹிஸ்புல்லா அமைப்பு கடந்து ஒரு வார காலத்தில் பெரும் இழப்புகளை சந்தித்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக அந்த அமைப்பின் தொடர்பாடல் சாதனங்களின் வெடிப்பு சம்பவங்களில் பல உறுப்பினர்கள் கொல்லப்பட்டதோடு கடந்த வெள்ளிக்கிழமை பெய்ரூட் நகரில் நடத்திய வான் தாக்குதல்களில் ஹிஸ்புல்லாவின் முன்னணி தளபதி ஒருவர் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா தளபதியின் இறுதிச் சடங்கில் கடந்த ஞாயிறன்று பங்கேற்ற அந்த அமைப்பின் பிரதித் தலைவர் கஸ்ஸம், 'இஸ்ரேலுடன் வெளிப்படையாக செயற்படும் புதிய கட்டம் ஒன்றுக்குள் நாம் நுழைந்துள்ளோம்' என்று குறிப்பிட்டார். 'அச்சுறுத்தல் எம்மைத் தடுக்காது. இராணுவ ரீதியில் அனைத்தையும் எதிர்கொள்வதற்கு தயாராக உள்ளோம்' என்றும் அவர் கூறினார்.

மறுபுறம் லெபனானில் தரைவழி நடவடிக்கை ஒன்றுக்கான சாத்தியத்தியம் பற்றி இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் ஹகரியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, 'வெளியேற்றப்பட்ட வடக்கு இஸ்ரேலிய குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்கு பாதுகாப்பாக திரும்பும் பொருட்டு என்ன தேவையோ அதனை நாம் செய்வோம்' என்றார்.

## புதிய நீதியரசரை நியமிக்கக் கோரிக்கை

உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதியரசரை நியமிப்பதற்கான அறிவிப்பை வெளியிடுமாறு பாகிஸ்தானின் உச்ச நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

உச்ச நீதின்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் செனட்டருமான ஹமீட் கான் தலைமையில் லாஹூர் மேல் நீதிமன்ற சங்கத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாக 'டவுன்' தெரிவித்துள்ளது.

இச்செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய செனட்டர், நீதித்துறையின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையோ நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை நீக்கவோ முயற்சிகளை முன்னெடுக்க வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்ததோடு அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றுள்ளார்.



# காசாவில் இஸ்ரேலின் கடும் தாக்குதலுக்கு இடையே அடை மழையால் மக்கள் சிரமம்

மத்திய காசாவில் இஸ்ரேலியப் படை நேற்று (23) நடத்திய இரு தாக்குதல்களில் நான்கு சிறுவர்கள் உட்பட குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக காசா மருத்துவ வட்டாரம் குறிப்பிட்டிருப்பதோடு அங்கு ஏற்பட்டிருக்கும் அடை மழையால் இடம் பெயர்ந்த மக்களின் கூடாரங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

லெபனான் மற்றும் இஸ்ரேலுடனான மோதல் சர்வதேச அவதானத்தைப் பெற்றிருக்கு நிலையில் காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

காசாவில் இருக்கும் எட்டு அகதி முகாம்களில் ஒன்றான நுஸைரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து ஒரு மில்லியன் மக்கள் வரை அடைக்கலம் பெற்றிருக்கும் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று பின்னேரம் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் பெண் ஒருவர் மற்றும் அவரது நான்கு குழந்தைகள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரம் தெரிவித்தது.

தெற்கு காசா நகரான ரபாவில் இஸ்ரேலியப் படையின் விநியோகப் பாதை ஒன்றின் மீது வைக்கப்பட்ட பொறியில் இஸ்ரேலிய வாகனத் தொடரணி ஒன்றை சிக்க வைக்க முடிந்ததாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு நேற்று குறிப்பிட்டது.

இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பில் இருந்து உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

இதேவேளை கடந்த ஞாயிறு இரவு பெய்த கடும் மழையால் காசாவில் இடம்பெயர்ந்து கூடாரங்களில் வசிக்கும் மக்கள் சிரமங்களை சந்தித்துள்ளனர். இந்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சில கூடாரங்கள் அடித்துச் செல்லப்பட்டிருப்பதோடு உறக்கத்துக்கு மத்தியில் மக்கள் நடு இரவில் வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ளது. சில மணி நேர மழையால் மக்களுடன் உணவு, போர்வைகள் அனைத்துமே மூழ்கிவிட்டன' என்று தெற்கு காசாவில் மனிதாபிமான வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் அல் பவாசியில் இருந்து புரைன் என்பவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசி வழியாகத் தெரிவித்தார்.

சுமார் கடந்த ஓர் ஆண்டாக நீடிக்கும் காசா போரில் அங்குள்ள 2.3 மில்லியன் மக்களில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதோடு இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் 41,400க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.